ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு




செப்டெம்பர் - 2017

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

செப்டெம்பர் - 2017

மலர் - 49 இதழ் - 08

ஆசிரியர்

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே....

| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| சிலுவையின் மாண்பு | 02 |
| அன்பு அன்னைக்கோர் | 04 |
| சின்ன விசயங்கள் சிறந்த | 05 |
| கட்டக் குருத்து | 06 |
| குறுங் கதை | 07 |
| புனிதர்களை அறிவோம் | 10 |
| உலகெங்கும் மரியாள் | 11 |
| இலக்கிய மஞ்சரி | 12 |
| மருத்துவம் | 14 |
| வெற்றிலையும் களுதாவளை | 16 |
| மாணவர் பக்கம் | 17 |
| மறைக்கல்விதனை | 18 |
| இதுதான் அரசியல் | 19 |
| முடக்கப்பட்ட குழந்தைகளின் | 21 |
| தமிழ்த்தாய்க்கு மட்டக்களப்பில் | 22 |
| எண்ணிப்பார்க்கையில் | 23 |
| கடுகுக் கதை | 24 |
| கத்தோலிக்கத் திருமறை | 25 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com

விலை : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

சிலுவை மரமது
அதில் தொங்கிய
நம் மீட்பராம்
மெசியா இயேசு
நம்மை மீட்க
அவர் மீட்பரானார்.
ஆதாம் வழி வந்த
பாவமதை வேரறுக்க
பாவக்கறை போக்க
தன் இரத்தத்தால்
கழுவி சுத்தமாக்க
திருச்சிலுவை தனில்
தன்னுயிர் துறந்து
இருளிலிருந்து ஒளி கொடுத்து
பூமிதனை ஒளிரச் செய்த
தெய்வமதன் பெருநாள்தான்
திருச்சிலுவை நாதரின் பெருநாள்.

பிதாவானவர் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பியபோது அவருக்குத் துணையாக அவருக்குள்ளே தன் ஆவியை வைக்கிறார். இப்போது இயேசு மூவொரு கடவுளாகப் பிதாவோடும், ஆவியோடும் சுதனாக விளங்குகின்றார். அவ்வாறு விளங்கும் இயேசு திருச் சிலுவையிலே இருகரம் விரித்தவராய் பிதாவினிடத் தில் அவர் கொடுத்த ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். திருச்சிலுவையில் மூவொரு கடவுளாய் விளங்கிய இயேசுவிடம் ஒவ்வொருநாளும் நாம் ஜெபிக்கும்போது நாளும் பொழுதும் நம் உடலில் அறிந்தும் அறியாமலுமே திருச்சிலுவை வரைகின்றோம். அந்த திருச்சிலுவைநாதரை நாம் பெரிய வெள்ளி அன்று விஷேடமாக நினைவு கூருகின்றோம். ஏன்? எதற்கு? என்ற கேள்வி எழும் போது சிந்தித்துப் பாருங்கள். கடவுள் தாய் வழியாக இரத்தத்தை சதையாக்கி உயிர் மூச்சைக் கொடுத்து ஒரு குழந்தையைக் கொடுக்கிறார். ஆனால், தம் ஒரே மகனை இரத்தத்தால் சதையாக்கி உடலை உலக பாவங்களின் கழுவாயாகத் திருச்சிலுவையில், உடலாகிய சதையில் இருந்து இரத்தமும், தண்ணீரும் வழிந்தோட திருச்சிலுவையிலே இயேசு தன் உயிர் துறந் தார். இப்படிப்பட்ட மாபெரும் மீட்பரைப் பெரிய வெள்ளியன்று விசேஷமாய் நாம் எவ்வாறு நினைவு கூராமல் இருப்போம்?

அவ்வாறு பெரிய வெள்ளியன்று நமக்காய் சிலுவையில் கள்வர்கள் நடுவிலே உயிர் துறந்த இயேசு பேரின்ப வீட்டிலே கள்வர்களின் பாவம் போக்கி, புனிதமாக்கி அவர்களையும் தம்மோடு பேரின்ப வீட்டிற்கு அழைத்துச் சென்ற இயேசுவின் பாவமில்லா உலகை நமக்குத் தந்த திருச்சிலுவை நாதரின் பெருநாளை செப்டம்பர் மாதம் 14ம் நாள் பெருநாளாகக் கொண்டாடவிருக்கின்றோம்.

அந்த திருச்சிலுவை நாதரிடத்தில் நம் வாழ்வின் குற்றம், குறைகளை ஒப்புக்கொடுத்து நம் பாவங்களிலிருந்து மீட்புப் பெறுவோம். நம் சந்ததி சந்ததியாய் ஏழேழு தலைமுறையாய் வந்த பாவங்களையெல்லாம் அவரின் ஆசீரால் வேரோடு பிடுங்கி எறிவோம். இன்று முதல் நீர் ஆசீராய் விளங்குவாய் எனும் வேதாகம வாக்கியம் போல் நம் வாழ்வில் திருச்சிலுவைநாதரின் ஆசீரால் நம் குடும்பத்தில் சந்தோசத்தாலும், சமாதானத்தாலும் குறைகளையெல்லாம் நிறைவாக்கி ஆசீரின் குடும்பமாக வாழ்வோம்.

இறைவாக்கு

"கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள்வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார்"
– எபேசியர் 1:7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் மாண்பு

"ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறை சாற்றுகிறோம். அச் சிலுவை யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமை யாகவும் இருக்கிறது" (1 கொரி 1:23). இந்த வசனத்தின் மூலம் புனித பவுலடியார் சிலுவையைப்பற்றி மூன்று மதத் தவர் கொண்டிருந்த கருத்தை விளக்க முயலுகிறார்.

முதலாவது சிலுவை பற்றிய யூதரின் கருத்தை விளக்குகிறார். யூதரின் சட்டப்படி சிலுவையில் தொங்க விடப்பட்டவன் கடவுளால் சபிக்கப்பட்டவன் என யூத சட்ட நூலில் கூறப்பட்டுள்ளது (இச 21:23). இதனால் யூதர்கள் சிலுவையில் கொல்லப்பட்ட இயேசுவை மீட்ப ராக, மெசியாவாக ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். எனவே, சிலுவை ஒரு தடைக்கல்லாகவே யூதருக்கு விளங்கியது. இதனாலேயே புனித பவுல் கூட இயேசுவைப் பின்பற்றுப வரைத் துன்புறுத்தத் துணிந்தார் (கலா 1:13 – 14,3:13).

அடுத்து சிலுவை பற்றிய பிற இனத்தாரின் கருத்தை முன் வைக்கின்றார். யூதரின் கொள்கையின்படி யூதர் அல்லாதவர், அதாவது விருத்தசேதனம் செய்யப்படா தவர் அனைவரும் (கிரேக்கர்கள், உரோமையர்) பிற இனத்தவர்தாம் அவர்களின் கருத்துப்படி சிலுவை மடமை யின் சின்னம். சிலுவையில் அறையப்பட்ட ஒருவரை கடவுள், மீட்பர் என அழைப்பது மடமையாகும். ஏனெனில் இவ்வகை மரண தண்டனை இயலாமையின், பலவீனத் தின் அடையாளமாக அமைகின்றது.

ஆனால், கிறிஸ்தவர்களைப் பொறுத்தளவில் சிலுவை என்பது வாழ்வின் உயிர்ப்பின் சின்னம். கடவுளின் வல்லமையின் சின்னம். மீட்பின் சின்னம்.

இவ்விதமாக யூதர், பிற இனத்தார் இருவரும் சிலுவை பற்றி கொண்டிருந்த கருத்து தவறானது என்பதை நிரூபித்த புனித பவுல் சிலுவையின் மாண்பை எடுத் துரைக்கின்றார். "நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றி பறைசாற்றுகின் றோம்" (1கொரி 1:23) என்கிறார். ஏனெனில், சிலுவையில் இயேசு தொங்கி மரித்ததினால் ஒரு மிகப் பெரிய மாற்றம் நிகழ்கிறது. கிறிஸ்து சிலுவையில் மரித்ததால் கிறிஸ்து வும், அவர் மரித்த சிலுவையும் கடவுளின் வல்லமையும் ஞானமுமானது. அது இறைவனின் அரும் பெரும் செயல். புனித பவுல் கூறுவதுபோல் மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானம்மிக்கது. மனித வலிமையை விட அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது (1கொரி 1:25).

இங்கு புனித பவுலடியார் மிக ஆழமான உண்மையை வெளிப் படுத்துகின்றார். அதை யும் மிக இரத்தினச் சுருக்கமாகக் கூறி விடு கின்றார். கடவுள் தமது ஞானத்தாலும், வலிமையாலும் சிலுவையை, இயேசு வின் சிலுவைச்சாவை, சிலுவையில் மரித்த கிறிஸ்துவை உயர்த்தினார். புனித பவுலடியாரின்படி கிறிஸ்து தம்மை தாழ்த்திக் கொண்டார்.

**பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா,**
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் (பிலி 2:8–9). எனவே, இவையெல்லாம் இறைவனின் வலிமையின், ஞானத்தின் செயற்பாடு. இது இயேசுவின் சிலுவையில் ஒளிர்கிறது.

அத்தோடு கொரிந்து திருச்சபையில் இருந்த பிளவை நீக்க சிலுவையை உதாரணமாகக் கொண்டு வாதாடுகின்றார். கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றையும், இகழ்ந்து தள்ளுப வற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தார் (1 கொரி 1:26–28). எனவே, உலகக் கண்ணோட்டத்தின் படி தடைக்கல்லாகவும், மடமையாகவும் இருந்த சிலுவையை இயேசுவின் மரணத்தால் மாட்சியுடையதாக மாற்றியது போல, அதே உலகக் கண்ணோட்டத்தின்படி மடமையாகவும், வலுவற்றவராகவும் இருந்த புறவின கொரிந்தியரை நம்பிக்கையின் வழியாகத் தேர்ந்துகொண்டார். எனவே, எவரும் தமது ஞானத்தைக் குறித்தோ ஆற்றலைக் குறித்தோ பெருமை பாராட்டலாகாது. எனவேதான், பவுலடியார் "பெருமை பாராட்ட விரும்புகிறவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும்" (1 கொரி 1:31) என முடிக்கிறார்.

மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில் புனித பவுலடியாரின் கண்ணோட்டத்தில் அவமானத்தின், சாவின், பலவீனத்தின், அறிவீனத்தின் அடையாளமான சிலுவையை, இயேசு அதில் மரித்து உலகை மீட்டதால் மாட்சியின், வல்லமையின், ஞானத்தின் அடையாளமாக்கினார். பெருமைப்படுத்தினார். இது இறை வல்லமை, ஞானம். கிறிஸ்தவர்களும் உலகக் கண்ணோட்டத்தின் படி பெருமை பாராட்ட ஏதுமில்லை. அவர்களையும் கடவுள் தேர்ந்து கொண்டு மாட்சியும், பெருமையும்படுத்துகின்றார். எனவே, எல்லாம் அவன் செயல். எனவே, திருச்சிலுவையை மாட்சிபடுத்துவோம். நாம் கிறிஸ்தவ அழைப்பின் மாண்பினையும் உணர்வோம்.

தொடக்கம் முதலே சிலுவைதான் கிறிஸ்தவர்களின் ஒரே அடையாளமாக இருந்து வந்துள்ளது. கி.பி.347 முதல் 407 வரை கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயராக இருந்த புனித ஜான் கிறிஸோஸ்டம் சிலுவை குறித்த தனது ஒரு மறையுரையில் இப்படிச் சொல்வார். "சாத்தானுக்கு எதிரான வெற்றிப்பதக்கம் சிலுவை! பாவத்திற்கு எதிரான வாள் சிலுவை! தந்தை கடவுளின் உள் விருப்பம் சிலுவை! மகன் கடவுளின் மகிமை சிலுவை! தூய ஆவியாரின் சந்தோஷம் சிலுவை! சம்மனசுகளின் அலங்காரம் சிலுவை! திருச்சபையின் அரண் சிலுவை! பவுலடியாரின் பெருமை சிலுவை! புனிதர்களின் கோட்டை சிலுவை! உலகின் ஒளி சிலுவை!."

இத்தனை மகிமை பொருந்திய சிலுவையைத் தான் செப்டம்பர் 14இல் நாம் கொண்டாடுகிறோம். திருச்சிலுவைப் பக்தியைப் பரப்புவதற்கு வித்திட்டவர் உரோமைப் பேரரசன் கொன்ஸ்டான்டீனுடைய தாய் புனித ஹெலனாதான். ஏனெனில், கி.பி 312 கொஸ்தாந்தின் உரோமையின் அரசுரிமை பெற மாக்கன்சியுடன் கிறிஸ்தவர்கள் இணைந்து போராடும் போது வானில் சிலுவையுடன் "வெற்றி பெறுவாய்" என்ற வசனம் காணப்பட்டது. வெற்றி கிடைத்தது. மேலும், இயேசுவை அடக்கம் செய்த போது தூக்கி எறியப்பட்ட இயேசுவின் திருச்சிலுவையும் கி.பி 322இல் அவரது தாய் ஹெலனாவால் கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்தே திருச்சிலுவை பக்தி தொடங்கியது.

நான்காம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதத்திற்கு அரசாங்க அங்கீகாரம் கொடுத்து அதை நிறுவன ரீதியாக ஸ்திரப்படுத்திய பேரரசன் கொன்ஸ்டான்டீனையும், அவரது தாயையும் திருச்சபை மறக்க முடியாது. தனது மனமாற்றத்திற்குப்பின் ஹெலனா உரோமைப் பேரரசு முழுவதும் ஆலயங்கள் கட்டுவதிலும் கிறிஸ்தவத்தைப் பரப்புவதிலும் ஆர்வம் காட்டினார். 326ம் ஆண்டு எருசலேம் பயணம் செய்தார். இயேசுவின் சிலுவை இருந்த இடத்திலே ஒரு ஆலயம் கட்டப்பட்டது. இதைக் கட்டி முடிக்க மொத்தம் 09 ஆண்டுகள் ஆயின. கி.பி. 335ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் திகதி திருக்கல்லறைப் பேராலயம் புனிதம் செய்யப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டது. அதற்குத்தான் 14ம் திகதி இயேசுவின் சிலுவையானது வெளியில் கொண்டு வரப்பட்டு மக்கள் அதற்கு வணக்கம் செய்தனர். இதை நினைவு கூரும் விதத்தில்தான் திருச்சபை ஆண்டு தோறும் செப்டம்பர் 14ஐ திருச்சிலுவை திருவிழாவாக அனுசரிக்கிறது.

செப்டம்பர் 14 நமக்குச் சொல்லும் செய்தி கூட இதுதான்.

சிலுவை இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை!
சிலுவை நம் விடுதலை சாசனம்!
சிலுவை மன்னிப்பின் அடையாளம்!
சிலுவை வாழ்வின் மரம்!
சிலுவை இல்லையேல் கிறிஸ்தவம் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அன்னைக்கோர் அழகுமாலை

புரட்டாதி புலர்ந்துவிட்டால் கத்தோலிக்கராகிய எமக்கு ஓர் மகிழ்ச்சி. அதாவது எமது அன்னை மரியாளின் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்வோம். எமது ஆதிப் பெற்றோரின் பாவக்கறையுடன் படுத்துறங்கிய எமக்கு மீட்புத் தர மண்ணில் மலர்ந்த மரியன்னை அன்று கபிரியேல் தூதன் இயேசுவின் தாயாக ஆகும்படி சம்மதம் கேட்டபோது ஆழ்ந்த சிந்தனையின் பின் 'ஆகட்டும்' எனப் பதில் கூறி இயேசுவின் அன்னையானாள்; அவள் எமக்கெல்லாம் ஓர் அன்பு அன்னையானாள். அந்தத் தாயின் பிறந்த தினம் எமக்கு ஓர் விசேஷ தினம். அகிலமெங்கும் வாழ் எம் கத்தோலிக்கர் அனைவரும் ஆடிப்பாடி அகமும் முகமும் மலர்ந்து கொண்டாடும் அற்புதத் திருநாள்தான் அன்னையின் பிறப்பு நாள்.

அன்னை மரியாள் கருத்தாங்கிப் பெற்றெடுத்த தெய்வக் குழந்தை இயேசு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தோங்கி இறுதியில் பகைவர் கையினால் துன்புறுத்தப்பட்டு இரத்தமெல்லாம் சிந்தி கல்வாரியில் சிலுவையில் தொங்கித் தன்னுயிர் கொடுத்து எம்மை மீட்ட பலிதான் சிலுவைப்பலி. இன்று தினமும் திருப்பலியாக எமது ஆலயங்களில் அபிஷேகம் பண்ணப்பட்ட அருட்பணியாளர்களின் அற்புதக் கரங்களால் இயேசுவின் திருவுடல் திரு இரத்தமாகும் தெய்வீகப் பலியாக மிளிர்கிறது. இத் தெய்வீகப் பலியில் பக்தியுடன் பங்கேற்று அன்னையின் பிறந்தநாளைச் சிறப்புப் பலியாக ஒப்புக்கொடுப்போம்.

அன்னையின் பிறந்தநாள் பரிசாக அவர் காட்சி கொடுத்த அத்தனைபேரிடமும் அவர் அன்பொழுகக் கேட்டது பாவிகள் மனம்மாறச் செபமாலை சொல்லும் படியாக. அதை அவளே அவர்களுக்குக் கற்றும் கொடுத்தாள். இன்று அன்னையின் பிறந்தநாள் பரிசாகச் செபமாலையைச் சொல்லி அவளுக்கோர் அன்பு மாலையாக, அழகுமாலையாகச் சூடி மகிழ்வோம்.



: அருட்சகோதரி லூட்ஸ் F.M.M :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடை செய்யும் சட்டம்



அரபு உலகில் சுதந்திரமும், ஜனநாயகமும் கேட்டு ஆரம்பித்த "அரபு வசந்தம்" என்ற எழுச்சி, பல நாடுகளில் எதிர்பார்த்த நன்மைகளைக் கொணரவில்லையெனினும், மொரோக்கோ மற்றும் துனிசியாவில், சில நேர்மறை விளைவுகளைக் கொணர்ந்துள்ளது என்று, ஆசியச் செய்தி கூறுகின்றது.

மொரோக்கோவில், சமய எதிர்ப்பு நடவடிக்கைக்காக *மரண தண்டனை நிறைவேற்றுதல்* சட்டத்திற்குப் புறம்பானது என, அந்நாட்டின் சமய விவகாரங்களுக்கான Ulema உயர் மட்ட குழு, அண்மை மாதங்களில் ஏற்றுக்கொண்டுள்ளது. அதோடு, மொரோக்கோ குடிமக்கள், இஸ்லாமிலிருந்து வேறு மதத்திற்கு மாறுவதற்கும், இக்குழு, முழு உரிமை அளித்துள்ளது. இதன்படி, உலகளாவிய மனித உரிமைகள் அறிக்கை எண் 18ன்படி, சமய சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.


மேலும், துனிசியா நாட்டில், பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் சட்டம், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அண்மையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பெண்களுக்கு எதிரான எல்லாவிதமான வன்முறைகளும், பாகுபாடுகளும் தடைசெய்யப்பட்டுள்ளன மற்றும், பாலினங்களுக்கிடையே சமத்துவம் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

துனிசியா நாட்டின் தேசிய குடும்பக் கட்டுப்பாடு நிறுவனத்தின்படி, ஏறத்தாழ ஐம்பது விழுக்காட்டுப் பெண்கள், குடும்பங்களில் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

"அரபு வசந்தம்" என்ற கிளர்ச்சி, 2011ம் ஆண்டில், துனிசியா நாட்டில்தான் முதலில் ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

*ஆதாரம் :* AsiaNews / *வத்திக்கான் வானொலி*

## சிறந்த வாழ்க்கை நிஜ நிகழ்வுகள்



### பாறை தோண்டப் புறப்பட்டவனுக்கு .....

கையில் கருவிகளுடன் காட்டுக்குள் தினமும் செல்லும் இளைஞனைக் கண்காணித்து வந்தார் அந்தப் பெரியவர். தீவிரவாதியா? தலைமறைவுக் குற்றவாளியா? ஒருநாள் பின்தொடர்ந்தார். பாறைகள் நிறைந்த பகுதியில் பூமியைத் தோண்டி தண்ணீர் தேடிக்கொண்டிருந்தான் அவன். விசாரித்தபோது விபரம் தெரிந்தது. வேலை தேடி வந்தவன் அவன். வேலை கிடைக்கவில்லை. உழைக்காமல் வீட்டிலிருக்க உள்ளம் ஒப்பவில்லை. காட்டுப் பாறையைப் பிளந்து தண்ணீர் கொண்டு வரும்போதே தன் தசைகளை ஓய்வுக்குப் பழக்காமல் உழைப்புக்குப் பழக்கினான். அந்தப் பெரியவருக்குச் சொந்தமான 500 ஏக்கருக்குக் கண்காணிப்பாளர் ஆனான். பாறை தோண்டப் புறப்பட்டவனுக்கு புதையல் கிடைத்த மகிழ்ச்சி.

### இதயத்தில் அன்பிருந்தால் ....

மரணப் படுக்கையில் இருந்த அந்த மனிதனுக்காகப் பிரார்த்திக்க வந்தார் பாதிரியார். பக்கத்தில் ஓர் இருக்கை இருந்தது. தனக்குப் பிரார்த்திக்கத் தெரியாதென்றும், சில ஆண்டுகளாய் இறைவனுக்காக இருக்கை போட்டு, அதில் கடவுள் இருப்பதாய்க் கருதி உரையாடி வருவதாகவும் சொன்னான். "இதுவே, போதும். இனி ஏன் பிரார்த்தனை" விடை பெற்றார் பாதிரியார். இருக்கை விவகாரம் குடும்பத்திற்குத் தெரியாது. மறுநாள் அந்த மனிதன் இறந்தான். படுக்கையை விட்டு எழுந்து எதிரிலுள்ள இருக்கையில் தலை வைத்திருந்தான். கேள்விப்பட்ட பாதிரியார் சொன்னார், "கடவுளின் மடியில் கடைசி மூச்சை விட்டிருக்கிறான். இது எத்தனை பேருக்கு வாய்க்கும்?" இதயத்தில் அன்பிருந்தால் எதிர் இருக்கையிலும் இறைவன் இருப்பான்.

- ஜெ.செ.இரத்தினராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டக் குருத்து

- கலைக்கோட்டன் அ. இருதயநாதன் -



அம்மா! அம்மா!
உங்கட இளைய செல்லக் கட்டி
குளறுதம்மா! கண்ணால தண்ணி
வருகுது!

ஏண்டா செல்லம் - உனக்கு
என்னடா நடந்தது!

இல்லம்மா நீங்க
கட்டைக் குருத்து போட்டுட்டீங்களே
அதுதானம்மா!

அதுக்கு நீ ஏண்டி குளர்ரா

இல்லடி அக்கா
அம்மா கட்டைக்குருத்து
விட்டா
பிறகு
குலைபோடுவா
பிறகு
அம்மாவ வெட்டிப்போடுவாங்களே!

என்ன செல்லம் செய்யிற
நம்மட இனத்திர
தலைவிதி இதுதான்.

இதென்னம்மா கொடுமை
ஏனம்மா இந்த விதி நமக்கு!
ஆருதான் நம்மள அழிச்சாலும்
அழிக்க நினைச்சாலும்
நம்மட இனம்
வாழ்ந்துகொண்டுதானேயிருக்கு
இந்தா பார் செல்லம்
யேசுவ அடிச்சாங்க
சிலுவயில அறைஞ்சு கொன்றாங்க
ஆனால்
நம்ம விசுவாசம்
இன்னும் வளர்ந்தபடிதானே இருக்கு!
இதைவிட நமக்கு வேறென்ன
தேவை செல்லம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு ஆரம்பப் பாடசாலை. அன்று ஒரு வெள்ளிக்கிழமை.

யாரும் எதிர்பாராத விதமாக அதிபரின் அனுமதியுடன் வெள்ளை நிற விளம்பர வாகன மொன்று பாடசாலை வளாகத்தில் வந்து தரித்தது.

காலைப் பிரார்த்தனை முடிந்த கையோடு மாணவர்களை நோக்கி அதிபர் அந்த அறிவித்தலை விடுத்தார்.

"பிள்ளைகள் அனைவரும் வகுப்பு வகுப்பாகப் பிரிந்து வரிசையாக விளையாட்டு மைதானத்தில் ஒன்று சேருங்கள். உங்களை இவர்கள் பரிசோதித்துப் பார்த்துப் பரிசுதர இருக்கிறார்கள்!"

அதிபரின் பணிப்புரையைத் தொடர்ந்து, வகுப்பாசிரியர்கள் தாமே முன்வந்து மாணவர்களை வழிநடத்திச் செல்ல அந்த வைபவம் ஆரம்பமானது.


அங்கு தரித்து நின்ற பற்பசை விளம்பர வாகனத்தை அதிசயமாகப் பார்த்துக்கொண்டே, மாணவர்கள் அணிவகுத்து நடந்தனர்.

ஆடைகள் முதல், கை–கால் விரல் நகங்கள் தொடங்கி பற்கள் ஈறாக – உச்சி முதல் உள்ளங்கால் வரை துல்லியமாகப் பரிசோதனை நடந்தது.

பற்சுத்தம், வாய்ச் சுகாதாரம் பற்றிப் பரிசோதிக்கும்போது, மாணவர்களிடம் அநேக வினாக்கள் தொடுக்கப்பட்டன.

பரிசோதித்த டாக்டர், பற் சுகாதாரம் பற்றி ஒரு விரிவுரையே ஆற்றினார்.

பற் சொத்தை வருவதற்கான காரணங்கள், பரிகாரங்கள், தவிர்க்கவேண்டிய பதார்த்தங்கள், பானங்கள் பற்றியும் பிரலாபித்தார். பற்கள் உறுதியாக




குறுங்கதை – 36

**வீகேயெம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க என்னென்ன பதார்த்தங்களைக் கடித்துச்சாப்பிட வேண்டுமெனும் அவசியம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இன்று இந்தப் பற்பசைகள் வருமுன்பு, தம் முன்னோர்கள், உமிக்கரி, கரித்துண்டுகள், வேப்பங்குச்சி, ஆலங்குச்சி போன்றவற்றைப் பாவித்தபோதும் பற்சுகாதாரத்தைப் பேணிக்கொண்டதாகவும் இடித்துரைத்தார்.

இடையிடையே மருத்துமனை சென்று பற்களைக் கழுவி, ஈறுகள், முரசு முதலானவற்றையும் பாதுகாக்க வேண்டுமெனவும் உணர்த்தினார்.

சவர்க்காரம் கொண்டு கைகளை நன்றாகக் கழுவிய பின்னரே சாப்பிடவேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

நகங்களின் சுத்தம் பற்றியும் சிலாகிக்கப்பட்டது.

முடிவுரையாக, "நீங்கள் எல்லோருமே சுத்தமாக உடை அணிந்து வந்திருப்பதைப் பார்க்கச் சந்தோஷமாக இருக்கிறது" எனப் புன்னகைத்தார்.

அதேவேளை –

"இன்று வெள்ளிக்கிழமை என்பதால்தான் நீங்கள் இப்படி இருக்கிறீர்களோ தெரியாது..." என்று சிறிது நையாண்டியுடன் தனது பிரசங்கத்தை – பிரசாரத்தை முடித்துக்கொண்டார்.

ஈற்றில், தாம் ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி குறித்த ஒரு மாணவனை அழைத்து,

"இவரைப்போல் நீங்கள் அனைவரும் இருப்பதையே நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்" என்று கூறி,

"இவருக்காக எல்லோரும் ஒரு தடவை கரகோஷம் செய்யுங்கள் பார்க்கலாம்" என்றாரே பார்க்கலாம், பலர் முகங்கள் கடுப்பேறின.









எண்ணெய் போத்தல், ஜாடிகளை ஒரு ட்ரேயில் வைப்பதற்கு முன் கீழே பேப்பர் விரித்து வைத்துவிட்டால் எண்ணெய்ப் பிசுக்கு ஏற்படாமல் ட்ரே சுத்தமாக இருக்கும்

எலுமிச்சம் பழத்தைப் பிழிந்தவுடன் தோலைக் கீழே போடாமல் பாத்திரம் துலக்கும் சோப்போடு வைத்துத் துலக்கினால் பாத்திரங்கள் மேலும் பளபளக்கும்.




மளிகைப் பொருட்களை வெளியில் தெரியும்படி டப்பாக்களில் வைத்தால், பயன்படுத்துவதற்கு எளிதாக இருக்கும். அதோடு, பருப்பு போன்ற பொருட்களில் வண்டு பிடிப்பதை உடனுக்கு டன் தெரிந்துகொள்ளவும் முடியும்.

ஒரு சிலர் மட்டுமே கரவொலி எழுப்பினார்.

அங்கே சிறு சலசலப்பு ஏற்பட்டது. மருத்துவர் முகமும் கறுத்தது. ஆசிரியர்கள் முகத்தில் ஈயாடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஏனென்று வந்தவர்களுக்கும் புரியவில்லை.

தான் பரிகசித்தது தவறோ என்று அவர் மனவருத்தப்படுவதைக் குறிப்பாலுணர்ந்த அதிபர்,

“நான் சொல்லாமல் நீங்கள் கைதட்டி வரவேற்க மாட்டீர்களோ?” என்று சமாளித்தார். ஆற்றாமை அவர் முகத்தில் அப்பியிருந்தது.

இப்போது மைதானம் அதிர கரவொலி எழுந்து பரந்தது.

குறித்த மாணவனின் கரத்தைப் பற்றிக் குலுக்கிக்கொண்டே, விளம்பரதாரர் பரிசுப் பொதியைக் கையளித்தபோது, எவரும் சொல்லாமலே ஆச்சரியமாக மீண்டும் கரவொலி எழுந்து அடங்கியது.

“மற்றைய மாணவர்கள் ஒன்றும் மனங்கோண வேண்டாம். உங்கள் அனைவருக்கும் ஆறுதல் பரிசுகள் உண்டு”

என்று கூறியவாறே, பற்பசையும், தூரிகையும் இணைந்த ‘பக்கற்’ ஒன்றை விளம்பரதாரர் கொடுக்க, கூட வந்த மற்றவர்களும் சேர்ந்து பகிர்ந்துகொடுக்க வைபவம் இனிதே நிறைவேறியது.

மீண்டும் மாணவர்களிடையே சலசலப்பு. இலேசாகப் புறுபுறுத்தபடியே மாணவர்கள் கலந்து வகுப்புகளுக்கு அணிவகுக்க, இதையெல்லாம் அவதானித்த அதிபர், ஆசிரியர் அனைவரையும் தனது பிரத்தியேக அறைக்கு வந்து கூடுமாறு கேட்டுக்கொண்டார்.

மரியாதைக்காக ஆசிரியர் சிலர் பணம் கொடுத்துக் கொள்வனவு செய்து விளம்பரதாரர்களைத் திருப்திப்படுத்த, அந்த வாகனம் மெல்ல ஊர்ந்து வெளியே நகர்ந்தது.

அதிபர், தன் பணிமனையில் கூடிய ஆசிரியர்களைப் பார்த்துக் கர்ச்சித்தார் –

“அவன் பொடியன் ஆறெண்டு இனங்காட்டவோ நீங்கள் அப்படி நடந்து கொண்டீர்கள்? எவ்வளவு அவமானம் .... அவனைப் பார்த்தாவது மற்ற மாணவர்களும் திருந்த வேண்டும் என்று நீங்கள் ஆராவது ஒருவராவது சிந்தித்தார்களா...? இலவசக் கல்வி, சமத்துவம் என்று அரசாங்கமே வர்க்க பேதத்தை – சாதீயத்தை ஒழிக்க ஒரு வழி காட்டுகிறதே என்று நீங்களேன் உணருகிறீர்க ளில்லை? நான் அவதானித்தவரையில் ஒன்று மட்டும் சொல்கிறேன்... மற்றச் சமூகங்களெல்லாம் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னேற, உங்கள் சமூகம் மட்டும் பின்னடைவைச் சந்தித்தே தீரவேண்டுமென்று தலையெழுத்திருந் தால் அதை யாராலும் மாற்றமுடியாது. சரி, போய் உங்கள் கடமையைச் செய்யுங்கள். பலனை எதிர்பார்க்க வேண்டாம்!”

“நான் எல்லாரையும் குற்றம் சுமத்தயில்ல. என்னிலை ஏதும் பிழையிருந்தால் பகிரங்கமாகவும் மன்னிப்புக் கேட்கவும் தயாராய் இருக்கிறேன்”

என்று, தன் கர்ச்சனையை முடித்துக் கீழிறங்கி வந்தபோது, அனைவரும் சமாதானமடைந்ததாய்க் காட்டிப் புன்முறுவல் பூத்தவாறே கலைந்து போயினர்.

“சரியான பைத்தியக்காரன்” என்று தமக்குள் திட்டித் தீர்க்கவும் சிலர் இருக்கத்தான் செய்தனர்.

அவரவர் உள்ளத்தில் இருப்பதை யாரே அறிவார்.....?

**திருக்குறள் விளக்கம்**



அறத்துப்பால் பாயிரவியல் நீத்தார் பெருமை...

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு.**

[குறள் 21]

*விளக்கம்:*

*அற ஒழுக்கத்தில் சிறந்துநின்று, துறந்தவரது பெருமையைக் கூறுவதே, நூல்களின் விழுமியப் பயனாகக் கொள்ள வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களை அறிவோம்

பெப்ரவரி - 2017




மற்றில்டா இராஜேந்திரம்

### செப்டம்பர் 10ந் திகதி:

**புனித நிக்கலஸ் டொலன்டினோ :**
**(St. Nicholas of Tolentine)**



இவர் படகோட்டிகளின் பாதுகாவலர் ஆவார். இத்தாலி நாட்டில் பொந்தானா எனுமிடத்திலே வாழ்ந்த கம்பக்னோனுஸ் டி கருட்டி மற்றும் அமதா டி குய்தியானி ஆகிய தம்பதிகளுக்கு மணமாகிப் பல வருடங்களான போதும் குழந்தைப் பாக்கியம் கிடைக்காததால் மிராவில் இருந்த நிக்கலஸ் திருத்தலம் சென்று புனிதரிடம் செபித்தனர். இதன்பின் 1246ம் வருடத்திலே அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை அவதரித்தது. கருவிலிருக்கையிலேயே புனித நிக்கலஸின் பெயரைச் சூட்டிவிட்டனர் பெற்றோர். குழந்தைப் பருவம் முதற்கொண்டே அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்த நிக்கலஸ் 18வது அகவையிலே புனித அகுஸ்தினார் சபையிலே இணைந்துகொண்டார். 1271ம் வருடம் 25வது வயதில் குருத்துவ அருட்பொழிவு பெற்றார். போதிப்பதிலும், கற்பிப்பதிலும் பெயரும், புகழும் பெற்றார். இவருக்கு வானதூதர் பல தடவைகள் காட்சியளித்து "டொலன்டினோவுக்கு, டொலன்டினோவுக்கு" என்றுமட்டும் கூறிச்சென்றார். எனவே, இவர் அந்த இடத்துக்குச் சென்றார். அந்த இடம் அமைதியற்றுக் காணப்பட்டது. திருச்சபை பற்றிய சிக்கல்கள் நிறைந்த சூழலில் நிக்கலஸ் அமைதியின் திருத்தூதராக வாழ்ந்தார். அமைதியை ஏற்படுத்தினார். ஏழைகளைச் சந்தித்தார். சிறையிலிருப்போருக்கு ஆறுதல் அளித்தார். நோயாளரைக் குணமாக்கினார். வாழும்போதே பல புதுமைகள் செய்தார். தொடர்ந்து நோன்பிருந்து, ஒறுத்தல் முயற்சிகள் புரிந்து உடல் வாடிப் பலவீனமாகக் காணப்பட்டபோது ஒருநாள் அன்னை மரியா, புனித அகுஸ்தினார், புனித மொனிக்கா மூவரும் காட்சியளித்தனர். அவ்வேளையில் புனித கன்னிமரியா ஒரு வகையான ரொட்டியை நீரில் தோய்த்து நிக்கலஸின் வாயில் ஊட்டினார். அதையுண்டதும் புதுத் தென்பு பெற்றார். அதுமட்டுமல்ல, இதைப் பல்வேறு நோயாளிகளுக்கும் வழங்கிக் குணம் பெற வைத்தார். இதன் காரணமாகவே இவரது திருத்தலங்களிலே இன்றும் ரொட்டி வழங்கப்படுகிறது. இறந்த ஆன்மாக்க ளுக்காகச் செபிக்கும் வழக்கமுள்ள இவர் ஆன்மாக்கள் உத்தரிக்கிற இடத்தைக் காடசியில் கண்டார். அதன்பின் மக்களையும் அவர்களுக்காகச் செபிக்கச் சொன்னார். இவர் 1306ம் வருடம் புரட்டாதித் திங்கள் 10ம் நாளன்று இறையடி சேர்ந்தார். 1446ம் வருடம் புனிதர் பட்டம் பெற்றார். 1884ம் வருடம் திருத்தந்தை 13ம் சிங்கராயர் உத்தரிக்கிற நிலையிலுள்ள ஆன்மாக்களின் பாதுகாவலராக இவரை அறிவித்தார்.

### செப்டம்பர் 24ந் திகதி : புனித ஜெரார்ட் சக்ரெடோ (St. Gerard Sagredo) :

வெனிஸ் நகரில் 980ம் வருடம் சித்திரைத் திங்கள் 23ம் நாளன்று இவர் பிறந்தார். பெற்றோரின் அன்பில் இறையன்பைச் சுவைத்த ஜெரார்ட் இறைவனின் திருமுகத்தைப் பிறரில் கண்டு ஆனந்தமடைந்தார். ஆரம்பத்திலிருந்தே தன் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்தார். இறையழைப்பை உணர்ந்த இவர் வெனிஸ் நகரிலிருந்த சன் ஜோர்ஜியோ மக்கி ஆசிர்வாதப்பர் துறவு இல்லத்தில் இணைந்தார். சில ஆண்டுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின் ஜெருசலேமுக்குத் திருப்பயணம் மேற்கொண்டு ஹங்கேரி வழியாகச் சென்றார். இதையறிந்த அரசர் புனித ஸ்டீபன், தன் மகன் பெட் எமரிக்கிற்கு ஆசிரியராகப் பணி புரியுமாறு வேண்டு கோள் விடுத்தார். ஜெரார்ட் அதற்குச் சம்மதித்து அங்கேயே தங்கினார். அத்துடன் மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியி லும் ஈடுபட்டார். இதனால் ஏற்பட்ட பலன்களைப் பார்த்த அரசர் புதிதாக 'சானட்' எனும் மறைமாவட்டத்தை உருவாக்கி இவரை ஆயராக்கினார். கிறிஸ்துவை அறியாத மக்கள், எதற்கெடுத்தாலும் சண்டையிடுபவர்களாகவும், முரடர்களாகவுமிருந்தனர். அவர்களது அறியாமையால் பலர் அவர்களைச் சுரண்டிப் பெரும் பணக்காரர் ஆயினர். எனவே, மக்களைத் தரிசித்து, அவர்களது அழுகைக்குஆறுதல் கூறி அவர்களில் ஒருவராகவே வாழ ஆரம்பித்தார். எப்பொழுதும் அவர்களுக்காகச் செபித்தார். இவரது முயற்சி வீண் போகவில்லை. கிறிஸ்துவின் விழுமியங்களை அம்மக்கள் ஏற்றனர். "நாம் கிறிஸ்தவர்கள்" எனப் பெருமையுடன் கூறினர். ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொண்டனர். தீய வாழ்விலிருந்து மனம் மாறினர். ஒழுக்கத்தோடும், பண்பாட்டுடனும் வாழ்ந்தனர். 1038ம் வருடம் அரசர் இறந்ததும் நிலைமை தலைகீழானது. கிறிஸ்துவை ஏற்காத மதவாதிகளால் கிறிஸ்தவர்களுக்கெதிராகக் கலகம் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவர்களைக் காணும் இடத்திலேயே கொன்றனர். உயிருக்கஞ்சிய கிறிஸ்தவர்கள் மறைவிடம் தேடி ஓடினர். ஒருநாள் சிறிய இடமொன்றில் ஜெரார்ட் திருப்பலியை நிறைவேற்றிக்கொண்டிருந்தபோது, தாம் விரைவில் மறைசாட்சி முடியைப் பெறவிருக்கிறோம் என்பதைக் காட்சியில் கண்டார். 1046ம் வருடம் புரட்டாதித் திங்கள் 24ம் நாளன்று மக்கள் சிலருடன் புடா நதியைக் கடந்தபோது, எதிரிகள் இவரைக் கைது செய்து மலைக்கு மேல் இழுத்துச் சென்று, துன்புறுத்தி, அடித்துக் கொலை செய்தனர். இறக்குந் தறுவாயில் செபிக்கச் சக்தியற்ற நிலையிலும் "இறைவா! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இதற்கான தண்டனையை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" எனச் செபித்து உயிர் நீத்தார்.

# உலகெங்கும் மரியாளின் புகழ்... 29

## பச்சை உத்தரியத்தின் அன்னை: பிளாங்கி - வெர்செய்ல்ஸ், பிரான்ஸ்:



புனித கத்தரினுக்கு அன்னை மரியாள் காட்சியளித்த ஒன்பது ஆண்டுகள் கழித்து அதே துறவற மடத்திலிருந்த அருட்சகோதரி ஜஸ்டினா பிஸ்குவேபுரு என்பவருக்குத் தோன்றினார். அற்புத தரிசனம் அளித்த அன்னை, ஒளிர்கின்ற பரிசுத்தமான இதயத்தைத் தனது கைகளில் தாங்கியவாறு தோன்றி, பச்சைவண்ண உத்தரியத்தை அருட்சகோதரி ஜஸ்டினாவுக்கு வழங்கினார். அதைத் தொடர்ந்து அந்த அருட்சகோதரிகள் இத்தகைய பச்சை உத்தரியங்கள் தயாரித்து பாரிஸ் நகரில் வினியோகித்தனர். 1870ஆம் ஆண்டின் அருட்தந்தை ஒன்பதாம் பத்திநாதரின் அதிகாரபூர்வ அனுமதி கிடைக்கப்பெற்ற பிறகு பிரான்ஸ் நாடெங்கிலும் இது வினியோகிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி




மேற்குலக நாடுகள் கைத்தொழில் துறைகளில் வளர்ச்சியடைந்து தலை நிமிர்ந்து நிற்கின்றன. இவ்வாறே மின்னியல், இலத்திரனியல் துறைகளிலும் நாடுகள் மேலோங்கி விட்டன. இவ்வாறு முன்னேறிய நாடுகள் தங்களது சந்தைகளாக கீழைத்தேய மற்றும் ஆசிய நாடுகளைப் பயன்படுத்துகின்றன. சாதாரணமான குண்டூசி தொடக்கம், நவீன விமானங்கள் வரை சந்தைப்படுத்தப்படுகின்றன. ஆனால், இப்பொருட்களால் எமக்குக் கிடைக்கின்ற தீய விளைவுகள் பற்றி எம்மில் பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. இவ்வகையில் **CFL** வகையான மின்குமிழைப் பற்றி நாம் எவ்வளவு தூரம் அறிந்துள்ளோம் என்று தெரியுமா...?

நம் நாட்டில் அனைத்து வீடுகளிலும் மின் வலுவைச் சேமிப்பதற்காக **CFL** மின்குமிழ்களைப் பாவிக்கின்றோம். இப்போது LED மின்குமிழ்களும் பாவனைக்கு வந்துள்ளன. **CFL** மின்குமிழ்கள் தொடர்பாக நாம் அறியாத பயங்கரமான விடயங்களும் உள்ளன.

**CFL** மின்குமிழ்கள் மிகவும் பயனுடையவைபோன்றே உடையும்போது அபாயகரானவை. **CFL** மின்குமிழ்களில் கண்ணாடிச் சுருளினுள் இரசம் (Mercury) தடவப்பட்டுள்ளது. இது நச்சுத தன்மை கொண்ட பார உலோகமொன்றாகும். மின்குமிழ் உடைந்ததும் இந்த இரசம் அடங்கிய ஆவி வளியுடன் சேர்கின்றது. அத்துடன் உரியவாறு அகற்றாவிட்டால் மண்ணிலும், நீரிலும் நச்சுப் பொருள் சேர்ந்துவிடும். எனவே, சுற்றாடல் மாசடையும்; நீர் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதாகிவிடும். அதற்காக **CFL** மின்குமிழைப் பயன்படுத்தப்பயப்படவேண்டியதில்லை.

**CFL** மின்குமிழ் உடைந்தால் பின்வரும் செயன்முறைகளை மேற்கொள்ள வேண்டும் :

1. உடனடியாக அவ்விடத்தில் இருந்து வெளியேற வேண்டும்.
2. யன்னல்கள், கதவுகளைத் திறந்து வளி வெளியே செல்ல அனுமதியுங்கள்.
3. வாயுச் சீராக்கியை (Air Conditioner) நிறுத்திவிடுங்கள்.
4. கண்ணாடித் துண்டுகள், சிதறியுள்ள வெள்ளைநிறத் துணிக்கைகள் என்பனவற்றை இரு தடித்த அட்டைகளின் உதவியுடன் சேகரிக்க வேண்டும்.
5. அவற்றைக் கையால் தொடுவதனைத் தவிர்க்கவேண்டும். கையுறை பாவிக்க வேண்டும். சேகரித்த பொருட்களை நன்கு மூடக்கூடிய கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் போத்தலில் இட்டு இறுக்க மூடவேண்டும்.

— ஆழியோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6. சிதறியுள்ள தூள்களையும், மெல்லிய கண்ணாடித் துண்டுகளையும் சேகரிப்பதற்கு படை நாடாவை பயன்படுத்தி ஒட்டிச் சேகரிக்கலாம்.
7. மின்குமிழ் விழுந்து உடைந்த கம்பளம் அல்லது பாய் போன்ற பொருட்களைப் பயன்பாட்டில் இருந்து நீக்கிவிடவேண்டும்.
8. இறுதியில் ஈரத் துணியால் தரையைத் துடைக்க வேண்டும்: சுத்தம் செய்யப்பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பாத்திரத்தில் இட்டு இறுகமூடவேண்டும்.
9. மூடிய பாத்திரத்தை வீட்டுக்கு வெளியே வைக்க வேண்டும்: பின்னர் நச்சுக் கழிவுகளைச் சேகரிப்பாளரிடம் கையளிக்க வேண்டும்.
10. கை, கால்களினை சவர்க்காரம் இட்டுச் சுத்தம் செய்ய வேண்டும்.



தற்போது அனேகமான நாடுகளில் CFL மின் குமிழ்கள் தடை செய்யப்பட்டுவிட்டன. ஆனால், அந்நாடுகள் எமக்கு அவற்றை ஏற்றுமதி செய்கின்றன. எச்சரிக்கையாய் இருப்போம்!




பழச்சாறுகளை காலை, மதியம் ஆகிய நேரங்களில் அருந்தலாம். காபிக்கு பதிலாகச் சர்க்கரை சேர்க்காத பழச்சாறு அருந்தும் பழக்கத்தை வழக்கப் படுத்திக் கொள்ளலாம்.



இரவில் பழச்சாறுகளைக் குடிப்பதினால் சிறுநீர் கழிக்கும் உணர்வு அடிக்கடி ஏற்படும். எனவே, தூக்கமும் கெடும். ஆதலால், பழச்சாறுக்குப் பதிலாகப் பழமாகச் சாப்பிடலாம்.



**தொண்டை தொந்தரவுகளை நீக்கும் எளிய வழிகள் :**






உணவு உண்டபின் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், சப்போட்டா பழங்கள் சேர்த்த அனைத்து வகை மில்க் ஷேக், ஐஸ்கிரீம், பாயசம், பால் பொருட்களால் தயாரித்த இனிப்புகள் போன்றவற்றைச் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் இவற்றால் தொண்டையில் வீக்கம் வர வாய்ப்புகள் அதிகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கைப் பூவின் மருத்துவ மகிமை




**நரம்புத்தளர்ச்சி நீக்கும், தாம்பத்தியம் பலப்படுத்தும் முருங்கைப்பூ :**

*முருங்கைப்பூ பால், முருங்கைப்பூ சூப், முருங்கைப்பூச் சோறு கேள்விப்பட்டிருக்கிறீர்களா? முருங்கை என்றதும் அதன் காய்களும், கீரைகளும் மட்டுமே நமக்குத் தெரியும். அதில் மருத்துவக் குணங்கள் இருப்பதாகச் சொல்லக்கேட்டு விதம்விதமாய்ச் சமைத்து உண்டு ருசித்து இரசித்திருப்போம். ஆனால், முருங்கைப்பூவில் இருக்கும் சத்துகள் மட்டுமல்ல, அதில் இருக்கும் இரகசியங்கள் நம்மில் பலரும் அறிந்திராத ஒன்று!*

முருங்கையின் பலன் பற்றி சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. இதன் பலன் பற்றி அறிந்ததாலேயே சித்தர்கள் முருங்கையைப் 'பிரம்ம விருட்சம்' என்று அழைக்கிறார்கள்.

வீடுகள் மற்றும் தோட்டங்களில் முருங்கை மரங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால், நம்மில் எத்தனைபேர் முருங்கைப்பூவைச் சமைத்துச் சாப்பிட்டிருப்போம்..? காரணம் அந்தப் பூக்களின் மருத்துவ குணம் பற்றி தெரியாதது மட்டுமல்ல, முருங்கைப்பூவை விட முருங்கைக் காயையே நாம் அதிகம் சமையலுக்குப் பயன்படுத்திப் பழகியிருக்கிறோம். முருங்கைப்பூக்களின் பயன் அறிந்து இனிமேலாவது அவற்றைச் சமைத்து ருசிப்போமா?

இன்றைக்குப் பல்வேறு காரணங்களால் குழந்தையின்மைக் குறைபாடு விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு மிகச் சிறந்த தீர்வாக அமைந்திருக்கிறது இந்த முருங்கைப்பூ. முருங்கைக் கீரை, முருங்கைப்பூ இரண்டையும் சம அளவு எடுத்து நறுக்கி, எண்ணெயிட்டு வதக்கி வறுத்த வேர்க்கடலையைப் பொடித்துப் போட்டு உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் ஆண்மைத் தன்மை அதிகரிக்கும். தாம்பத்தியம் சிறக்கும். இதை வேக வைத்துக் கடைந்து குழம்பாகவும் செய்து சாப்பிடலாம். மேலும், முருங்கைப்பூ ஒரு கைப்பிடி எடுத்து அரைத்துப் பாலில் கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) தொடர்ந்து குடித்து வந்தால் தாம்பத்திய உறவில் ஆர்வம் ஏற்படும். முருங்கைப்பூவை காய வைத்துப் பொடியாக்கித் தேனுடன் கலந்து அதே ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் ஆண்மைக் கோளாறுகள் நீங்கும். முருங்கைப் பூக்களுடன் பால், பாதாம் சேர்த்துக் காய்ச்சிக் குடித்து வந்தால் விந்தணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இன்றைய அவசர யுகத்தில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரவு பகலாக ஓய்வின்றி உழைப்பது, கம்பியூட்டரே கதி என்று மணிக்கணக்கில் உட்கார்ந்திருப்பது போன்றவற்றால் மனஅழுத்தம், மன உளைச்சல் ஏற்படுவது சாதாரணமாகி விட்டது. அதிக வேலைப்பளு, மன அழுத்தம் காரணமாக நரம்புகள் செயலிழந்து நரம்புத்தளர்ச்சி ஏற்படும். அந்த நேரங்களில் முருங்கைப்பூவைக் கஷாயம் வைத்து வாரம் இருமுறை அருந்தி வந்தால் நரம்புத்தளர்ச்சி சரியாகும்.

முருங்கைப்பூக்களை உணவாகவோ, மருந்துகளில் சேர்த்தோ, பச்சையாகவோ சாப்பிட்டு வருவது சிறந்தது. அரைக்கீரையுடன் அரைப் பங்கு முருங்கைப்பூ சேர்த்துக் கடைந்து சோற்றுடன் சாப்பிட்டு வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருங்கைப்பூவைத் துவையல் செய்தும் சாப்பிடலாம். இப்படி ஏதோ ஒரு வகையில் முருங்கைப் பூக்களை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் சர்க்கரை நோயால் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும்.

இதைக் கஷாயம் செய்து சாப்பிட்டு வந்தால் சூடு தணியும். பெண்களுக்கு மாதவிடாயின் போது ஏற்படும் அதிக இரத்தப்போக்கு, மேக நோய்கள் போன்றவற்றையும் குணப்படுத்தும். மேலும், மாதவிலக்குக் காலங்களில் அதிக கோபம், எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி எனப் பல்வேறுவிதமான மனம், உடல் அவதிகளுக்கு ஆளாவார்கள். அப்போது முருங்கைப் பூவைக் கஷாயம் செய்து அருந்தி வந்தால் மனம் அமைதி பெறும். உடல் கோளாறுகளும் நீங்கும்.

பாடசாலை, கல்லூரிகளில் பயிலும் பிள்ளைகளுக்கு நினைவாற்றல் இருந்தால்தான் அவர்கள் நல்லமுறையில் தேர்ச்சி பெறமுடியும். ஆகவே, குழந்தைகளுக்கு நினைவாற்றல் பெருகவும் முதியோருக்கு வரக்கூடிய மறதி நோயைத் தடுக்கவும், வந்த நோயை விரட்டவும் இது நல்ல மருந்தாகிறது. கைப்பிடி அளவு முருங்கைப்பூவை அரைத்து அல்லது பாலில் கலந்து கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து காலை, மாலை எனக் குடித்து வந்தால் பலன் கிடைக்கும்.

இன்றைய கம்பியூட்டர் யுகத்தில் நாம் எல்லோருமே கண்களுக்கு அதிக வேலை கொடுக்கிறோம். கம்பியூட்டரில் பணியாற்றுபவர்களுக்கு 40 வயதுக்குமேல் ஆகிவிட்டால் கண்ணாடி அணியாமல் வேலை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களால் பேப்பர்கூட படிக்க முடியாது.

வீடுகளில் இருப்பவர்கள் தொலைக்காட்சியே கதி என்று இருப்பதால் அவர்களுக்கும் விரைவில் கண்கள் வறண்டுபோதல், கண்ணிமைகளைச் சிமிட்டும் தன்மை குறைந்துபோவது, கண்களின்முன் மின்மினிப்பூச்சிகள் பறப்பது போன்ற தோற்றம் ஏற்படுதல், தலைவலி, பார்வை மங்கல் எனக் கண் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அத்தகைய சூழலில் முருங்கைப்பூவை நிழலில் உலர்த்தி பொடித்துத் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் பார்வைத்திறன் அதிகரிப்பதோடு கண்ணில் ஏற்படும் வெண்படலம் மாறிக் கண் கோளாறுகள் சரியாகும். பூக்களுடன் பசும்பால் சேர்த்துக் காய்ச்சி அருந்தி வந்தால் கண்களில் ஈரப்பசை அதிகரித்து பிரச்சினைகள் நீங்கும்.

**முருங்கைப்பூ பால் :**

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் முருங்கைப்பூ பால் அருந்தி வந்தால் உடல் நலக் கோளாறுகள் நீங்கும். இரண்டு கைப்பிடி முருங்கைப்பூவை 100 மி.லி பாலில் கொட்டி நன்றாக வெந்ததும் மசித்து, மூன்று ஏலக்காய், நான்கு பாதாம் பருப்பு பொடித்துப்போட்டு மேலும் 200 மி.லி பாலைச் சேர்த்து பனங்கற்கண்டு சேர்த்து அருந்தலாம். முதலில் பச்சை வாசனை வீசும், குடித்துப் பழகினால் மீண்டும் மீண்டும் சாப்பிடத் தூண்டும்.



**முருங்கைப்பூ சூப் :**

தாச்சியில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை போட்டுத் தாளிக்க வேண்டும். அத்துடன் ஒன்றாகச் சேர்த்து அரைத்த தனியா, சீரகம், மிளகு மற்றும் சுக்கு, பூண்டு, வெங்காய கலவைகளைப் போட்டு லேசாக வதக்க வேண்டும். பிறகு அதில் அரை லிட்டர் தண்ணீர் ஊற்றிக் கலக்கி பச்சை வாசனை போகுமளவு கொதிக்க விட வேண்டும். அதில் பொடியாக நறுக்கிய முருங்கைப் பூக்களைச் சேர்த்துக் கொதிக்க விட வேண்டும். பூ நன்றாக வெந்ததும் இறக்கினால் சூடான, சுவையான முருங்கைப்பூ சூப் தயார். விரும்பினால் ஒரு டீஸ்பூன் நெய் சேர்த்துக் கொள்ளலாம். அடிக்கடி இதைச் செய்து குடித்து வந்தால் சளித்தொல்லைகள் நெருங்காது.

**முருங்கைப்பூச் சோறு:**

பாசுமதி அரிசியை உதிரியாக வடித்துக் கொள்ள வேண்டும். அதில் சிறிது நெய் சேர்த்து உதிர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கிடையே இட்லித் தட்டில் முருங்கைப்பூக்களை வைத்து அரை வேக்காடாக வேக வைக்கவும். அதன்பிறகு சிறிது எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் பொடியாக நறுக்கிய வெங்காயம், நீளவாக்கில் வெட்டிய பச்சை மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும். பிறகு சாதம், முருங்கைப்பூ சேர்த்துக் கலக்க வேண்டும். அத்துடன் சிறிது சிறிதாக நறுக்கிய குடமிளகாய், நறுக்கிய கொத்தமல்லித்தழை, மிளகுத்தூள் சேர்த்துக் கலந்தால் சுவையான முருங்கைப்பூச் சோறு தயார். இது சத்தானது மட்டுமல்ல சுவையானதும்கூட!

- தொடர் 20ம் பக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலையும் களுதாவளையும்

வீசிடும் தென்றற்காற்றில்
வெற்றிலைக் கொடிகள் மெல்ல
பேசிடும் அழகு காட்டிப்
பெருமிதம் தன்னைக் கூட்டி
ஊசிவால் கொண்டு கூராய்
"ஒளிர்வது அரசஞ் சாதி
தேசுடன் ஆலஞ்சாதி"
திகழ்ந்திடும் இரண்டு வர்க்கம்.

வெற்றிலை என்றால் அஃது
வெறுமிலை ஆகாதென்றும்
வெற்றிகள் களுதா வளைக்கு
விளைத்திடும் வெற்றி இலைதான்!
வெற்றிலை இன்று எந்த
விழாவொடு சடங்கு ஆகும்?
அற்புதம் அதுதான் எங்கும்
அரசியோடரச னாகும்!

தாம்பூலம் தரிப்ப தெங்கள்
தமிழர்தம் மரபு ஆகும்
காம்பினைக் கிள்ளிச் சுண்ணக்
களியினைச் சிறிது பூசி
சோம்பலை விடுத்துப் பாக்கின்
தோலினை உரித்துச் சீவி
கராம்பொடு கறுவா ஏலம்
கலந்து வாய்க்கிட வாசந்தான்

கிளியிதழ் வண்ணங் காட்டிக்
கிறு கிறுப் பேற்று மென்பர்
உளமொத்த மணமக் கட்கும்
உண்டிடக் கொடுப்பர் முன்னோர்
களைப்பினை நீக்கிக் காதம்
கடுவழி நடப்ப தற்கும்
உழைப்பவர்க் குதவி என்றும்
உரைப்பது உண்டு மூத்தோர்.

கிழக்கிலே களுதா வளையூர்
கீர்த்தி பெற்றிலங்க நன்கு
செழிக்கும் வெற்றிலையாம் தொன்மை
சேர் தொழில் தொடர்ச்சி இன்றும்
உழைப்பவர் முயற்சி யாலே
ஒளிர்வதைக் காண்பீர் இங்கே
வளம்பல திமும் "களுதா
வளையது காணும் மேன்மை...!"

---

அரசஞ்சாதி :
அரசமரத்திலையின்சாயல் கொண்டது
ஆலஞ்சாதி :
ஆலமரத்திலையின் சாயல் கொண்டது.

– கவிஞர் நிலா தமிழின்தாசன் –

---

சிந்திக்க சில வரிகள் 28

கான மயில் ஆடுவது கண்டோர் வான்கோழி
தன் வலி மாற்றான் வலி கிஞ்சித்தும் நோக்கா
மேடையேறி நின்று தோல்வி கண்ட பின்
தன்னிலை உணரத் தலைப்பட்டதுவே.

– ராஜ் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- நிஃபிளனி சுஜேந்திரன் -

**மார்ட்டின் லூதரின் புரட்சி (1483-1546 வரை):**

பல்வேறுபட்ட சீர்குலைவுகளின் மத்தியிலும் 1517ம் ஆண்டு காலப்பகுதியில் கத்தோலிக்கத் திருச்சபையே கிறிஸ்தவ உலகில் பொது, தனியார் வாழ்வில் அதிகச் செல்வாக்குச் செலுத்தியது. உரோமைப் பாப்புவினால் கிறிஸ்தவப் படிப்பினைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களே பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் வழக்க முறைகளுக்கு ஆதாரமாகவிருந்தன. நீதி, நிர்வாகம், பிறர் நலப்பணிகள் போன்ற பல்வேறு துறைகளும் குருக்களின் தலைமைத்துவத்தால் சிறப்பாக இடம்பெற்றன. இது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வந்தது. இவ்வாறு ஒரு கட்டுக்கோப்பினுள் இயங்கி வந்த திருச்சபையினுள் திடீரெனத் தோன்றி பிளவுகளை ஏற்படுத்தியதே மார்ட்டின் லூதரின் புரட்சி.

இவர் ஜெர்மனிய நாட்டின் சக்சனியிலுள்ள எயிஸ்லெபன் எனும் ஊரில் 1483 நவம்பர் 10ம் நாளில் ஹன்ஸ் லூதர், மார்கிரெட் என்போருக்கு மகனாய்ப் பிறந்தார். ஆறு குழந்தைகளில் இவர் மூத்தவராவார். சுரங்கத் தொழிலாளியான இவரின் தந்தை ஒரு கடுமையான போக்குடையவர். தாயார் தேவ பயமும், அடக்க ஒடுக்கமும் உடையவராவார். சிறு வயதுமுதல் கூர்மையான புத்திசாலியாய் விளங்கிய லூதர், தந்தையின் கடுமையான கட்டுப்பாட்டில் வளர்ந்ததால் இவரின் இளமைப் பருவம் பயத்துடனும், பீதியுடனுமே அமைந்தது. மான்ஸ் பீல்டு, மாக்டிபர்க் போன்ற இடங்களில் இளமைக் கல்வியைக் கற்றார். இலத்தின் மொழியை நன்றாகக் கற்று, பின்னர் எபிரேயம், கிரேக்கம் போன்ற மொழிகளையும் கற்க அடித்தளம் பெற்றுக்கொண்டார். இவர் ஜெர்மனியைச் சேர்ந்த சிறந்த இறையியலாளராவார். 1501ல் ஏர்பர்ட் (Erfurt) பல்கலைக்கழகக் கல்வி கற்று கி.பி. 1505ல் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றார். 1507ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, பல்வேறு இடங்களிலும் பணியாற்றினார்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் போதே உரோமையில் அப்போது நிலவிய ஊழல்கள் பற்றியும், சுகபோக வாழ்க்கை பற்றியும் அவரால் அறிய முடிந்தது. கி.பி. 1512ல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற இவர் கற்பித்தலில் ஈடுபட்டிருந்த வேளை புதிய ஏற்பாட்டின் விசுவாசமும், இறையருளும் பற்றி அதிகக் கவனம் செலுத்தினார். இவரின் ஆன்மீகப் பிரச்சினை தன்னுடைய மறுவுலக நிலை வாழ்வைப் பற்றிய சந்தேகமும், பயமுமாகும். இதனால், அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பெற்று, ஒறுத்தல் முயற்சிகளிலும் ஈடுபட்டார். அகுஸ்தீனிய சபையிலிருந்து செயற்பட்டாலும், பூரண மன நிம்மதி இவருக்கு இங்கும் கிடைக்கவில்லை. ஏனெனில், அவர் இங்கு கண்ட திருச்சபையின் தலைவர்களின் ஒழுங்கீனங்கள், தேவ பயமற்ற வாழ்க்கை முறை, இடாம்பீகமான ஆடம்பர வாழ்க்கைமுறை போன்றவை இவருக்குத் திருப்தியின்மையினையும், நிம்மதியற்ற நிலையினையும் தோற்றுவித்தன. இவ்வேளையிலே தன் ஓய்வு நேரத்தை திருவிவிலியம் வாசிப்பதில் செலவிட்டார். இதனால் தூய பவுலுடைய உரோமையத் திருமுகத்தின் இறைவார்த்தையான "இறைவனின் நீதி" பற்றிய வார்த்தை அதாவது "ஒருவன் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவனாகிறான்" என்பது இவரின் உள்ளத்தைத் தொட்டது. இதனால், படிப்படியாக நற்செயல்கள், ஒறுத்தல்கள் செய்வது மீட்பளிக்கும் என்பதை நம்பவில்லை. பாவ நாட்டமுள்ள மனிதன் ஒரு போதும் நல்ல செயல் செய்வதில்லை என்பதை அறிவித்தார். மனித நம்பிக்கை மட்டுமே வாழ்வளிக்கிறது, எம்மை இறைவனுக்கேற்புடையோராக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை ஏற்றுக்கொண்டார். மீட்பிற்கு மனித செயல்கள் தேவையில்லை. ஜென்ம பாவத்தால் மனித இயல்பு முற்றாக அழிந்துவிட்டதென்றும், இதனால், மனிதன் பாவம் செய்யவே தூண்டப்படுகின்றான் எனவும் போதிக்கலானார்.

மேலும், திருத்தந்தை 2வது யூலியஸ் 1513ல் பிரகடனம் செய்த "பரிபூரண பலன்" இதனை ஜெர்மனி யில் பிரசித்தப்படுத்த திருத்தந்தை 10ம் சிங்கராயர் டொமினிக்கன் சபைக் குருவான டெட் சல் என்பவரை 1517ல் தெரிவுசெய்தார். இதனை அறிவித்து வழங்கி டத் தன்னைத் தெரிவு செய்யாததினால் திருத்தந் தைக்கு எதிராகக் கோபமடைந்த லூதர் திருத்தந்தை பணம் பெற்று அருள் சீட்டு வழங்கி, ஒருவன் மனம் வருந்தாமலே அவன் பாவத்தை மன்னிக்கிறார் எனக் கூறி பரிபூரண பலனுக்கு எதிரான போதனைகளை பரப்பலானார். இதனால், 1517 ஒக்டோபர் 17ல் திருச் சபையின் முறையற்ற செயற்பாடுகளை வெளிக்கொண ரும் பத்திரம் ஒன்றை வெளியிட்டார். இதில் 98 முக்கிய கோட்பாடுகள் அடக்கப்பட்டிருந்தன.

பரிபூரண பலன் என்பது சிற்சில பாவங்களுக் குரிய தண்டனையிலிருந்து முழுமையாக அல்லது அரைவாசியாக விடுதலை பெறுவதாகும். இவ் விடுத லையைப் கொடுப்பது தவறு என்பது இவரின் கருத் தாகும். இப்பலனை வியாபாரம் அல்லது தூய வியாபா ரம் என அழைத்தார். மற்றும் இறையருளைப் பெற ஒவ்வொருவரும் தனித் தனியே செயற்பட வேண்டும் எனவும், மீட்பு இறைவனிடம் இருந்து வருகிறதே தவிர நற்செயல்களின் வழியாக உரிமை கோருவ தில்லை எனவும், தமது சக்தியால் அல்ல இறைவனின் உதவியைப் ஏற்றுக் கொள்பவர்களே புனிதர்களாவர் எனவும், புனிதர்கள் நல் வாழ்வைப் பின்பற்றிய உன்னத முன்மாதிரிகையல்ல, இறை உதவியை ஏற்றுக் கொண்ட பாவிகளே எனவும், நற் பிரஜையாக இருப்பின் ஒருவர் இறைவனின் மன்னிப்பைப் பெற்ற குற்றவாளி யாவார் எனவும் பல்வேறு வகையான கருத்துகளை கூறியதால் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டார். இவரின் பல்வேறு வகையான தவறான போதனைகள் கி.பி. 1520 யூன் 15ல் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டதனால் இவர் 1521ல் திருச்சபையில் இருந்து 10ம் சிங்கராயர் திருத் தந்தையினால் விலக்கப்பட்டார். இதனால், லூதரின் இறுதி நாட்கள் மிகவும் துயரம் மிகுந்ததாகவே காணப் பட்டன.

## தேசிய மறைக்கல்வி தினம் - புரட்டாதி 24




இறை சிறப்பும், இனிய வார்த்தைகளும் என்றும்,
குறையறியா குதூகலிக்கும் குழந்தைகட்கும்
சிறைபிடித்தே சின்னஞ்சிறார்களை ஞாயிறுதோறும்,
மறைக்கல்விக்கே அர்ப்பணித்தே வாழ்ந்திடலாமென
பறை சாற்றினரே அவரவர் பங்குத்தள மறையாசிரியர்களே!

விரிந்து பரந்த மழலைகளின் உலகத்தினிலே,
சரிந்து விழாமல் விசுவாச வாழ்வை ஆழப்பதித்திட,
புரிந்து கொள்ளும் தருணம்தான் மறைபோதனைகள் - ஆகவே
பரிந்து பேசி இறைவார்த்தைகளை போதித்திடவே
வரிந்து கட்டிக்கொண்டே வாழ்கின்ற மறையாசிரியர்களே!

நாதரின் போதனைகளை மீட்டிப் பார்த்திடத் துடிக்கும்,
தூதர்களே அனைவரும் மெய்ஞ்ஞான உத்தமர்களே,
பாதகர்களைக் கண்டால் கண்ணியமாக விலகிடுங்கள்,
வேதியர் சொல்லுவதைப் பவ்வியமாய் கேட்டிடுங்கள் என
சாதகமாய் அனைவருக்கும் தாகம் தீர்க்கும் மறையாசிரியர்களே!

சிந்தனைகளைச் சீர்த்தூக்கிப் பார்த்தே எல்லோரும்,
நிந்தனைகளை அனுபவித்த நேசரின் துணைகொண்டு,
உந்தனையே அவர்க்கீந்து உண்மையான பிள்ளைகளாய்,
வந்தனைகள் பலவற்றை இறைவனிடம் எடுத்தியம்பியே,
எந்தனைக்கும் இவர்கள்தான் இணையில்லா மறையாசிரியர்களே!



- பீ. ஐ. கைடிபொன்கலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நம் நாட்டு அரசியல் நாளுக்கொரு வடிவம், பொழுதுக்கு ஒரு மாற்றம் என்று தறிகெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றது. தொடங்கி வைத்தவனே சந்தர்ப்பவாதியாக மாறி நின்று இதை எப்படிச் செய்ய முடியும் என்று அடுத்தவனைச் சுட்டிக் காட்டி அலறுகின்றான். எல்லாம் பதவிக்குத்தான்.

நாட்டு அரசியல்தான் இந்தப்போக்கு என்றால் உலக அரசியல் இன்னும் தூள்!

கடந்த வருட நொவம்பர் மாதம். அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரையிலும் திருமதி ஹிலரி கிளின்டன் தான் வெல்வார் என்று பல மட்டங்களிலும் எதிர்பார்க்கப் பட்ட போதும் முடிவுகள் வெளிவந்து அதிர்ச்சி அளித்தன. அரசியல் அனுபவம் குறைவான வர்த்தகப் பிரமுகரான டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவரது பதவியேற்பு ஜனவரி மாதம் நடைபெற்றபோது, அவருடைய பதவியேற்பிற்கு எதிராகச் சுற்றயலிலே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சமீபத்திய அமெரிக்க அரசியலில் இது ஒரு எதிர்பாரா திருப்பமாகும். அவரது வெற்றி குறித்து பல நாடுகளிலும், பல நிலைகளிலும் சந்தேகங்கள் கிளப்பப்பட்டாலும் சமீப காலத்தில் அமெரிக்கச் செய்தி ஊடகங்கள் பல உண்மைகளை வெளிக்கொண்டுவந்துகொண்டிருக்கின்றன. நாளுக்கு நாள் புதுப்புது தகவல்கள். குறிப்பாக ஹிலரி கிளின்டனை தோற்கடித்து ட்ரம்பின் வெல்ல வேண்டுமென்பதில் சோவியத் நாட்டினுடன் நெருங்கி உறவாடிய ட்ரம்பின் மகன் மற்றும் மருமகன் ஆகியோரின் பங்களிப்பு பெரிதுபடுத்தப்படுகின்றது. ஹிலரிக்கு எதிரான தகவல்களைத் தருகின்றேன் என்று அழைத்த சோவியத் நாட்டு வழக்கறிஞரைச் சந்தித்தும், அந்நாட்டின் வர்த்தக, அரசியல் பிரமுகர்களோடு விருந்துண்டும் செயல்பட்ட வரலாறுகள் பூதாகாரமாக வெடித்துக் கிளம்பிய நிலையில், 'என் குடும்பத்தவர் இனி இல்லையென்ற நேர்மையாளர்கள்' என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றார் ட்ரம்ப். வெள்ளை மாளிகையைச் சேர்ந்த பெண்களைப் பயன்படுத்தி தன் மகன், மருமகன் ஆகியோருக்கு நற்சான்றுகளை வழங்குகிறார்.

இருந்தபோதும், கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களினடிப்படையில் சோவியத் நாட்டின் தலையீடு பலமாகச் சந்தேகிக்கப்பட்டு அவரது கட்சியைச் சேர்ந்த செனட்டர்களாலேயே சோவியத்துக் கெதிராக தடைகள் கொண்டு வரப்பட்டன. பலத்த இக்கட்டுக்கள் மத்தியில் விருப்பமில்லாமல் அவர் அந்த சட்டவாக்கத்தில் கையெழுத்திட வேண்டிய தலையிடி அமெரிக்க அதிபரை வாட்டுகிறது. சோவியத்துக்கு இது பலத்த சவாலையும், கோபத்தையும் கிளப்பி விட்டிருக்கிறது. இது தவிரவும் வட கொரியாவின் அச்சுறுத்தல் வேறு! கடந்த ஒரு மாதத்திலே இரண்டு தடவைகள் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை அது வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்துள்ளதுடன் அமெரிக்க நாட்டின் முக்கிய நகரங்கள் பலவும் தனது வீச்செல்லைக்குள் வந்து விட்டதாக வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ம் பக்.தெடர்..

கொரிய அதிபர் கிம் சூழுரைத்து பயங்கொடுத்திருக்கிறார். 'சீனா தேவையென்றால் உதவட்டும் இல்லையென்றால் நாங்களே வட கொரியாவைக் கட்டுப்படுத்துவோம்' என்று ஒரு மாதத்தின் முன்னே சவால் விட்ட ட்ரம்ப் 'வட கொரியாவைக் கட்டுப்படுத்துவதில் சீனா எங்களுக்கு ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்ய மறுக்கிறது' என்று புலம்பித் தள்ளியிருக்கின்றார்.

சீனாவும், சோவியத்தும் வடகொரியாவை நசுக்கி விடமுடியுமான பலம் வாய்ந்த சக்திகளாக சிறிய நாடான வடகொரியாவுக்கு அருகில் இருந்த போதும், அவை இது விடயத்தில் சிறு துரும்பைத் தானும் அசைக்கப்போவதில்லை. தனது பட்டுப்பாதை அபிவிருத்தியின் மூலம் பாதி உலகத்தையே தன் கைக்குள் போட்டுக்கொண்டு விட்ட சீனா அமெரிக்காவின் புலம்பலை இரசிக்கிறது. பதவியேற உதவிய ட்ரம்ப் தனக்கெதிரான சட்டத்தில் கையெழுத்து வைத்துவிட்டுப் புலம்பிக்கொண்டிருக்கின்ற ட்ரம்ப்பிற்கு ஆதரவாகச் சோவியத் களம் இறங்கப் போவ தில்லை. உண்மையில் இந்த இரு நாடுகளும் ஆறுதலாக சாய்மானக் கதிரைகளில் வசதியாக இருந்து கொண்டு நடப்பதை வேடிக்கை பார்க்கத்தான் போகின்றன. ஆனால், இவையிரண்டும் வடகொரியா மீதான பொருளாதாரத் தடைகள் விதிக்கும் ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானத்திற்கு ஆதரவை வழங்கியுள்ளன.

வர்த்தக உலகின் போட்டிகளுக்கு மட்டும் முகம் கொடுத்து அதில் ஓரளவு வெற்றிகண்டிருந்த அமெரிக்க அதிபர் உலக அரசியலையும் வணிகத் துறையைப் போலக் கையாண்டு விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டதன் தார்ப்பரியத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். அதுமட்டுமல்ல, அவருக்கு உயரத்திற்குப் பயம், கடலுக்குப் பயம், இருட்டுக்குப் பயம் என்று சொல்லப்படும் 'போபியா' க்களில் ஒன்றாக ஒபாமா 'போபியா' வந்து வாட்டி வதைக்கின்றது. ஒபாமாவின் பெயரைத் தன் எண்ணத்திலிருந்தும், அமெரிக்க வரலாற்றிலிருந்தும் அழித்தெறிந்துவிடத் துடிக்கும் மனிதர் போன்று அவர் நடந்து கொள்கிறார். ஒபாமா எட்டு வருடங்களில் கொண்டு வந்த சட்டங்கள் திட்டங்களை அகற்றி விட இவர் காட்டும் முனைப்பு இவருடைய ஆதர வாளர்களாலேயே முறியடிக் கப்பட்டிருக்கிறது. இவரும் அவர்கள் மீது சினங்கொண்டு உருட்டியும் மிரட்டியும் பார்க்கிறார். வெள்ளை மாளிகையிலிருந்து இரகசியங்கள் கசிவது தலையிடியாக இருக்கிறதென்று அடுத்தடுத்து உயரதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்துகொண்டிருக்கின்றார். இவரது சட்டாம்பிக் குணத்தால் அமெரிக்க அதிபர் என்ற வகையில் அமெரிக்க வரலாற்றில் என்றும் இல்லாதவாறு இவரது மதிப்பீடு அல்லது ஆதரவு 33% மாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. அவரும் விட்டேனா பார் என்று கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு சவால் விட்டபடி நிற்கின்றார். உலகம் இன்று ஒரு அழிவுக்குத் தயாராகி நிற்கின்றது. அது அமெரிக்காவாலேயே மேடையேற்றப் படுமோ என்கின்ற அச்சம் மக்கள் மனங்களில் இல்லாமலில்லை.

நமது அண்டை நாடான இந்தியாவில் இந்துத்துவ முனைப்புகளின் வேகம் சூடு பிடித்த நிலையில், தெற்காசியாவின் சட்டாம்பியாக அது கொண்டிருந்த கனவு சீனாவால் தகர்க்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான் இன்னும் முன்னைய சோவியத் நாட்டின் மாநிலங்களாக இருந்து தனி நாடுகளாகப் பிரிந்த நாடுகள் என்று அனைத்தையும் வெற்றிகரமாகக் கையாண்டு தனது இராணுவ வியூகத்தினுள் பட்டுப்பாதைப் பாதுகாப்பை உருவாக்கி வருகிறது. இலங்கையில் இந்தியாவின் இராஜதந்திரங்கள் தோல்வி கண்டுவிட்டன. இப்போது தான் முக்கிய பிரமுகர்கள் இலங்கை விடயத்தில் அதன் கொள்கை வகுப்புக்களில் விமரிசனம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இது கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் தான்,

▲

### மருத்துவம்

**முருங்கைப்பூ முட்டைப் பொரியல் :**

*தாச்சியில் எண்ணெய் ஊற்றி பொடியாக நறுக்கிய சீரகம், பூண்டு சேர்த்து வதக்க வேண்டும். அதைத்தொடர்ந்து நறுக்கிய பச்சை மிளகாய், கிள்ளிய கறிவேப்பிலை, வெங்காயம் சேர்த்து நன்றாக வதங்கியதும் காம்பு நீக்கி தண்ணீரில் அலசிய முருங்கைப் பூக்களைப் போட்டுக் கிளற வேண்டும். நன்கு வதங்கியதும் உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து தண்ணீர் சேர்த்து மூடிவைக்க வேண்டும். வெந்ததும் கிளறிவிட்டு ஒரு முட்டையை உடைத்து ஊற்றி நன்றாகக் கிளறினால் முருங்கைப்பூ முட்டைப் பொரியல் தயார். சாப்பிடச் சுவையாக இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடக்கப்பட்ட குழந்தைகளின் உலகம்

தன் மகள் வழிப்பேரன், திண்ணையில் தன் கண்முன்னாலேயே விளையாடிக் கொண்டிருக்க, பக்கத்து வீட்டுப் பெண்மணியுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார் அம்புஜம் பாட்டி. அந்த 2 வயதுச் சிறுவன், எதையோ எடுக்க அவசரமாக ஓடியதில், கால் தடுமாறி, கீழே விழுந்தான். அடி எதுவும் பலமாகப் படவில்லை என்பதை தூரத்திலிருந்தே பார்த்து முடிவுசெய்த பாட்டி, தன் கண்களை இறுக மூடிக் கொண்டு அமர்ந்திருந்தார். சற்று எழுந்து, தன் பாட்டியைப் பார்த்த சிறுவன், தன் விளையாட்டைத் தொடர்ந்தான். "ஏன் பாட்டி, பிள்ளையைப்போய்த் தூக்கிவிட்டிருக்கலாமே'' என்றார் பக்கத்து வீட்டுப் பெண்மணி. "என் பேரன் மீது எனக்கு அளவு கடந்த பாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், குழந்தைகளைப் பொத்தி, பொத்தி வளர்ப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. தெருவில் இறங்கி விளையாடக் கூடாதாம், புழுதி ஒத்துக்காதாம். எந்தக் குழந்தை இன்று நம் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடுகின்றது? பின் எப்படி அவர்களுக்கு மனவுறுதியும், உடலுறுதியும் கிட்டும்? இன்று குழந்தைகளிடையே போட்டிகளைத்தான் நாம் வளர்த்துக் கொண்டிருக்கிறோம். அவனைவிட நீ அதிக மார்க் வாங்கிக் காண்பிக்கவேண்டும் என, பாடம், படிப்பு, டியூஷன், மனப்பாடம், மதிப்பெண் என இவை போதும் என்ற மனநிலையை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். நாம் கதை சொல்லி சோறு ஊட்டினோம். குழந்தைகள் நம் முகத்தைப் பார்த்துக் கொண்டு சோறுண்டன. இன்றோ தொலைக்காட்சியைப் போட்டுவிட்டு, சோறூட்டுகிறார்கள். கதைகள் சொல்லிக் குழந்தைகளில் ஓர் அழகான கற்பனை உலகம் உருவாக உதவிய காலங்கள் இன்றில்லை. நிலா நிலா ஓடிவா, என்ற இயற்கைப் புந்தங்களுக்கும் இன்று நேரமில்லை. எதை எதைச் செய்யவேண்டும் என கற்றுக் கொடுத்தோம் ஒரு காலத்தில். ஆனால் இன்றோ, குழந்தைகள்



தொடர் 26ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய்க்கு
# மட்டக்களப்பில் மணிமகுடம்

"தமிழுக்கும் அமுதென்று பெயர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று தமிழின் உயர்வினைச் சொன்னவன் புரட்சிக்கவி பாரதிதாசன். இன்று உலகிலுள்ள செம்மொழிகளுள் மூத்த மொழியாக தமிழ் திகழ்வது தமிழர்களாகிய நம் எல்லோருக்கும் பெருமையே. இத்தகைய உயர்வினைக் கொண்ட தமிழினை உலகெலாம் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் கொண்டாட வேண்டியதும், அதனைவிட அதனை அழிவிலிருந்து காக்கவேண்டியதும் மாபெரும் கடமையாகும். இதனையே பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதி பாடினான்:

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்...
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்யதல் வேண்டும்

இன்று தமிழ் காக்கும், வளர்க்கும் பணியில் பாரினில் பலரும் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அவ்வகையில் கடந்த ஆடித்திங்கள் 30ம் நாள் (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி வளாகத்தினுள் தமிழுக்காக ஓர் அரிய பெரிய விழா நடைபெற்றது. ஆடம்பரமற்ற, விளம்பரமற்ற அமைதியான விழா. அந்நாளில் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் க. பாஸ்கரன் முன்னிலையில் தமிழ் அன்னை திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் தமிழ் ஆர்வலர்களும், பற்றாளர்களும் பங்கு பற்றியிருந்தமை சிறப்பம்சமாகும்.

அவ்வுருவச் சிலையினை வடிவமைப்பதில் முன்னின்று உழைத்தவர் மட்டக்களப்பில் வாழும் மூத்த தமிழறிஞர்களுள் ஒருவராகிய திருவாளர் வாகரைவாணன் ஆவார். அவரது எண்ணத்தில் உதித்த இப்பெரும் நற்பணிக்கு பல நல்லுள்ளங்கள் உதவிக்கரம் நீட்டியமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். முதலில் இத் திருவுருச்சிலை பாடசாலை வளாகத்தினுள் நிறுவப்பட வேண்டிய அனுமதிகளை வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் எமது பாராட்டுக்குரியவரே. அவ்வாறே இம்முயற்சியினை முன்னெடுத்த இந்துக் கல்லூரி முதல்வர் மற்றும் அவரது குழுவினர் எமது பாராட்டுக்குரியவர்களே. அவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள். இவ்வுருவ வடிவமைப்பில் ஈடுபட்ட அன்பர்களுக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.






தமிழ்த் தாயின் திருவுருவத்தின் கீழ் திருவாளர் வாகரைவாணன் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலா தமிழின் தாசன்

பேரும்பா

## பெருமை

| | |
|---|---|
| பசிக்குணவு இலாதிருத்தல் | வறுமை |
| பகிர்ந்துண்ணார் மனம் பாலை | வெறுமை |
| பசப்பான வார்த்தை தினம் | |
| பகர்வதனால் ருசிக்காது | |
| பகிர்ந்துண்ணும் வாழ்வொன்றே | பெருமை |

வடிக்கப்பட்டுள்ள கவிதை வரிகள் திருவுருவத்தின் பெருமையினைப் பறைசாற்றி நிற்கின்றன.

சிரசுதனில் ஒளிரும் 'சிந்தாமணி' மகுடம்
பரிதி எனக்காதில் பளபளக்கும் 'குண்டலம்'
வரிகையில் 'வளையல்' வளை இடையில் 'மேகலை'
அரசியவள் தாளை அணி செய்யும் 'சிலம்பு'

என்று தமிழின் ஐம்பெரும் காப்பியங்களை அணிந்தவளாயும், வலது கரமதில் செங்கோலையும், பாண்டிய நாட்டுக்கொடியினையும், இடது கரமதில் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களைத் தாங்கியவளாகவும் கம்பீரமாக, செழுமைமிகு தமிழின் தாய் என்றும் கன்னித் தாயாக் காட்சியளிப்பது பார்ப்பதற்கு அருட்சியாகவும், உள்ளத்திற்கு மகிழ்ச்சியாகவும் உள்ளது. இந்த அரிய நிகழ்வினை முன்னெடுத்த தமிழ் வரலாற்றுப் பேரவைக்கு எனது சிரம் தாழ்த்திய வாழ்த்துக்களும் வணக்கங்களும் உரித்தாகட்டும்.

தமிழால்
ஒன்றுபடுவோம்,
தமிழுக்காய்
என்றும்
வாழ்வோம் என
வாழ்த்துகின்றேன்.



அருட்பணி அ. நவரெட்ணம் (நவாஜி)
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## எண்ணிப்பார்க்கையில் ...

பல வேளைகளில் நம்மில் பலரும்
ஒரு பணியை முடித்துக் கொள்ள
ஒரு நாள் போதுமா என்று முழிப்பதுண்டு.
ஒரு நாளில் என்ன செய்து விட முடியும்
என்று மலைப்பாய் நிற்பதுமுண்டு!
ஒரு நாள் என்பது 24 மணித்தியாலங்கள்
கொண்டது,
அதில் 144,000 நிமிடங்களும்,
8,640,000 நொடிகளும் இருக்கின்றன.
எத்தனையோ விடயங்களைச் சாதிக்க
இந்த காலம் நமக்குப் போதுமானதென்று
அதைப் பயன்படுத்தும் வழி பற்றி
எண்ணிப்பாரக்கையில் நமக்குப் புரியும்
நாம் ஒரு நாளில்தானே பிறக்கிறோம்?
எம்மால் ஒரு நாளில் மாற முடியும்,
ஒரு நாளில் நாம் அன்புக்கு
அடிமையாகிவிட முடியும்!
ஒரு கணத்தில் எத்தனையோ
சாதனைகள் நிகழும்போது
ஒரு நாள் என்பதே பெரிது!



ஒரு நாள்பொழுது!

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

## நீதிமொழிகள் 23:1

"ஆளுநர் வீட்டில் நீ உணவு கொள்ள உட்காரும்போது, உனக்குமுன் இருப்பதை நன்றாய்க் கவனித்துப் பார். உனக்கு அப்போது அடங்காப் பசி இருந்தாலும், உன் தொண்டையில் கத்தி இருப்பதாக நினைத்துக்கொள். அவர் தரும் சுவையான உண்டியை உண்ண ஆவல் கொள்ளாதே; அது உன்னை வஞ்சிக்க விழையும் உணவாயிருக்கலாம்."



- வசம்பை இடித்துத் தூளாக்கி, இரண்டு கிராம் அளவு எடுத்து, வாயில் போட்டு சுவைத்து, வெந்நீர் குடித்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
- மாதுளம்பழச்சாறுடன் தேன் கலந்து, 48 நாட்கள் தொடர்ந்து குடித்துவர, இரத்தசோகை நீங்கும்.
- கண்களில் எந்த நோய் தென்பட்டாலும் அன்னாசிப்பழம் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குணமாகும்.



# கடுகுகள் சிறிதுதான்... ஆனால் ....

அன்ரனின் சக உத்தியோகத்தர் சிவரஞ்சன் சற்று யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

"என்ன மச்சான் யோசிக்கிறா...?"

"அன்ரன்! என்ட மூணு வயசுச் சின்னவன் என்னட்ட ஒரு கேள்வியொண்ட கேட்டான் மச்சான்.... நான் ஆடிப்போயிட்டன்...."

"என்னடாப்பா .... கேட்டவன்...."

"அவனுக்கு விளையாட்டு கார்கள், வாகனங்கள் எண்டா கொள்ளைப்பிரியம்; ஆனா வாங்கிக் குடுத்து அரை மணித்தியாலத்தில எல்லாம் துண்டு! துண்டு! அதனால இரண்டு மாதமா ஒண்டும் வாங்கிக் கொடுக்கல்ல....

நேற்று "ஏன் டடா.... எனக்கு விளையாட்டுச் சாமான் வாங்கித் தாறல....?" எண்டு கேட்டான்.


"நீங்க போட்டு உடைக்கிறீங்களே!" எண்டு சொன்னன். அதற்கு அவன் என்னட்ட கேட்டானே ஒரு கேள்வி .... அப்பிடியே ஏங்கிப் போயிட்டன்...." என்றார் சிவா.

"அப்பிடி என்ன கேட்டவன்...."

"டடா.... நீங்க விளையாட்டுச் சாமான் வாங்கித் தாறனீங்கதான்.... ஆனா, அத உடைக்காம எப்பிடி பாவிக்கிற எண்டு சொல்லித் தரலியே...."

அன்ரன் ஆச்சரியப்பட்டுப்போனார்.

"மச்சான்.... பிள்ளைகள் எல்லாம் சரியாத்தான் இருக்கிறாங்க.... பெத்தவங்க நாங்கதான் பிழ விடுறம்.... கடுகுகள் சின்னன்தான்..... அதுக்குள்ள இருக்கிற விஷயம் பெரிசுதான் ...." என்றார் அன்ரன்.




பற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

**தரம் : 11** **கத்தோலிக்கத் திருமறை** நேரம் : 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India))

## பகுதி I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

11. திருமுழுக்கு யோவான் சென்ம பாவத்திலிருந்து நீக்கப்பட்டார் என்பது,
    1. திருச்சபையின் படிப்பினை
    2. வேதாகமப் படிப்பினை
    3. யூதச் சட்டப் படிப்பினை
    4. மறைநூல் அறிஞர்களின் படிப்பினை

12. மரியாளின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை .......... துள்ளிற்று.
    1. சந்தோசத்தால் 2. மகிழ்ச்சியால் 3. பயத்தால் 4. வேதனையால்

13. செக்கரியா எழுதுபலகையில் குழந்தையின் பெயரை எவ்வாறு எழுதினார்?
    1. திருமுழுக்கு யோவான்
    2. யோவான்
    3. பேதுரு
    4. இயேசு

14. யோவான் தமது தூதுரைப் பணியை எங்கிருந்து ஆரம்பித்தார்?
    1. கலிலேயாவிலிருந்து
    2. யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதியிலிருந்து
    3. திபேரியாக் கடற்கரையிலிருந்து
    4. சமாரியா பகுதியிலிருந்து

15. தாய் திருச்சபையானது திருவழிபாட்டின் ஆண்டில் மனமாற்றத்தின் காலங்களாகத் தந்துள்ள பிரதான காலங்கள் எவை?.
    **A.** திருவருகைக் காலம் **B.** தவக்காலம் **C.** பாஸ்குக் காலம் **D.** பொதுக்காலம்
    1. A யும் B யும் 2. B யும் C யும் 3. C யும் D யும் 4. A யும் C யும்

16. திருமுழுக்கு யோவான் கம்பீரத்துடன் மக்களுக்குப் பறைசாற்றியது :
    1. பாவமன்னிப்பு அடைய மனம்மாறி திருமுழுக்கு பெறுங்கள்
    2. எனக்குப் பின் வருபவரைப் பின்பற்றுங்கள்
    3. அடி மரத்தில் கோடரி வைத்தாயிற்று
    4. காலம் வரும் அப்போது அனைத்தையும் காண்பீர்கள்.

17. நாம் மீட்படையத் தேவையானவை :
    1. அன்பு, இரக்கம்
    2. மனம் வருந்துதல், மனமாற்றம்
    3. செபமும், உபவாசமும்
    4. திருமுழுக்கு, மனம் திரும்பல்

**பாடம் : 10**

18. மூவொரு கடவுளின் வெளிப்பாடு இடம்பெற்ற சம்பவம் :
    1. இயேசுவின் இறப்பில்
    2. இயேசுவின் திருமுழுக்கின்போது
    3. உயிர்ப்பின்போது
    4. சிலுவையில் உயிர்விடும்போது

19. திருமுழுக்கு பெற்றபின் இறைபணிக்குத் தம்மை ஆயத்தம் செய்வதற்காக இயேசு எங்கே சென்றார்?
    1. எருசலேம் 2. யூதேயா 3. கலிலேயா 4. பாலை நிலத்திற்கு

20. பாலை நிலத்தில் இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள் எத்தனை?
    1. 1 2. 2 3. 3 4. 4

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடக்கப்பட்ட குழந்தைகளின் உலகம் ...

... என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்க நேரமின்றி, செய்தபின், அதைச் செய்யாதே என கண்டிப்பதில், என்ன பயன் இருக்கப் போகிறது? செய்த தவறைப் புரிந்துகொள்ள குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கிறோமா என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்?" இவ்வாறு, பாட்டி பேசிக்கொண்டே செல்ல, அந்தக் காலத்து இரண்டாம் வகுப்பு ஆசிரியராக இருந்த பாட்டிக்குள், இத்தனை ஏக்கம் இருக்கிறதா என, வாயடைத்துப்போய் நின்றார் பக்கத்து வீட்டுப் பெண்மணி.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## நீதிமொழிகள்

சண்டை நடக்கும் வீட்டில் விருந்துண்பதைவிட, மன அமைதியோடு பழஞ்சோறு சாப்பிடுவதே மேல்.

சொரணை கெட்டவனுக்கு நூறு அடி கொடுப்பதைவிட உணர்வுள்ளவருக்கு ஒரு சொல் சொல்வது மிகுந்த பயனைத் தரும்.

வாக்குவாதத்தை தொடங்குவது மதகைத் திறந்துவிடுவது போலாகும்; வாக்குவாதம் மேலும் வளருமுன் அதை நிறுத்திவிடு.

அடுத்தவர் கடனுக்காகப் பொறுப்பேற்று, அவருக்காகப் பிணையாய் நிற்பவன் அறிவல்லாதவனே.

தம் நாவைக் காத்துக்கொள்பவரே அறிவாளி; தம் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்பவரே மெய்யறிவாளர்.

பேசாதிருந்தால் மூடனும் ஞானமுள்ளவன் என்று கருதப்படுவான்; தன் வாயை மூடிக்கொள்பவன் அறிவுள்ளவன் எனப்படுவான். – அதிகாரம் 17 ”

**மட்/சமூகத் தொடர்பு நிலையத்தினால் தூய யோசேப்வாஸ் ஆண்டினைச் சிறப்பிக்குமுகமாக நடாத்தப்பட்ட தூய யோசேப் வாஸ் தொடர்பான பாடல் இறுவட்டுப் போட்டியிலும், குறுந்திரைப்படப் போட்டியிலும் கலந்துகொண்டோருக்கு எமது நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**இதில்,**

*பாடல் இறுவட்டுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரங்கள் :*

**1ம் பரிசு :**

திரு. *F.* ஜூட் திலீபன்,
*84/7, B,* 9ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு :**

செல்வி. *P.* ஆன் சப்திக்கா,
தூய மரியாள் பேராலயம்,
புளியந்தீவு.

**3ம் பரிசு :**

திரு. *P.D.A.* ஜெயகுமார்,
*06,* கிளெனி ஒழுங்கை,
மட்டக்களப்பு.

*"குடும்பங்களை நெறிப்படுத்திய தூய யோசேப்வாஸ்" எனும் குறுந்திரைப் படப் போட்டியில் 1ம் பரிசினைப் பெறுவது,*

**தூய காணிக்கை அன்னை ஆலயம்,**
தாண்டவன்வெளி,
மட்டக்களப்பு.



**இயக்குநர்,**
**மட்/சமூகத் தொடர்பு நிலையம்,**
**ஆயர் இல்லம்,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. அதைச் சாமுவேல் இஸ்ரயேலர் அனைவருக்கும் எடுத்துரைத்தார். பெலிஸ்தியருக்கெதிராகப் போர் தொடுத்து ........................ பாளையமிறங்க, பெலிஸ்தியரும் அபேக்கில் பாளையமிறங்கினர்.

அ) சீலோவில் ஆ) எபனேசரில் இ) எகிப்தில்

2. போர் மூண்டபோது பெலிஸ்தியர் ........................ 4,000 பேரை வெட்டி வீழ்த்தினர். பாளையம் திரும்பிய வீரர்களிடம் பெரியோர் "இன்று ஆண்டவர் நம்மைத் தோல்வியுறச் செய்தது ஏன்? ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையைக் கொண்டுவருவோம்" என்றனர்.

அ) இஸ்ரயேலருள் ஆ) எகிப்தியருள் இ) எபிரேயர்களுள்

3. வீரர்கள் சீலோவுக்கு ஆட்களை அனுப்பி, கெருபுகளின் மீது வீற்றிருக்கும் படைகளின் ........................ உடன்படிக்கைப் பேழையைக் கொண்டுவரும்போது, ஏலியின் புதல்வர்களான ஒப்னியும், பினகாசும் உடன் இருந்தனர்.

அ) தாவீதின் ஆ) மோசேயின் இ) ஆண்டவரின்

4. பேழை பாளையம் வந்ததும் மக்கள் அனைவரும் நிலம் அதிர பெரும் ஆரவாரம் செய்தபோது, இதனைக் கேட்ட பெலிஸ்தியர், "........................பாளையத்தில் இத்தகைய கூச்சல் என்?" என்று வினவி உடன்படிக்கைப் பேழை வந்தமையை அறிந்தனர்.

அ) இஸ்ரயேலரின் ஆ) எபிரேயரின் இ) யூதர்களின்

5. அப்போது பெலிஸ்தியர் ........................ கொண்டு, "நமக்குஐயோ கேடு! இதற்கு முன்பு இப்படி நேர்ந்ததே இல்லை! நம்மைக் காப்பவர் யார்? நீங்கள் எபிரேயருக்கு அடிமைகளாக ஆகாதபடிக்கு ஆண்மையோடு போரிடுங்கள்!" என்றனர்.

அ) பேரச்சம் ஆ) அச்சம் இ) பயம்

6. பெலிஸ்தியர் மீண்டும் போர் தொடுத்தபொது, இஸ்ரயேலர் தோற்றனர். இஸ்ரயேலருள் 30,000 ........................ மாண்டனர். பேழை கைப்பற்றப்பட்டு ஏலியின் இரு புதல்வர்கள் ஒப்னியும், பினகாசும் மாண்டனர்.

அ) குதிரைப்படையினர் ஆ) போர்வீரர்கள் இ) காலாட்படையினர்

7. போர்க்களத்திலிருந்து ஒருவன் ஓடிச் சென்று சீலோவை அடைந்தான். அவனது ஆடைகள் கிழிந்திருந்தன. தலையில் புழுதி படிந்திருந்தது. ஏலி வழியோரம் ஓர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரது ........................ கலக்கமுற்றிருந்தது. செய்தியறிந்ததும் நகர்முழுவதும் அழுதது.

அ) உள்ளம் ஆ) மனம் இ) சிந்தனை

8. அழுகுரல் கேட்ட ஏலி, "ஏன்?" எனக் கேட்க, அம் மனிதன் செய்தியைத் தெரிவித்தான். அப்போது ஏலியின் வயது தொண்ணூற்று எட்டு. கண் பார்வை மங்கிவிட்டது. அம்மனிதன், "இஸ்ரயேலர் புறமுதுகிட்டு ஓடினர். பெரும் ........................ ஏற்பட்டு, உம் இரு புதல்வரும் மாண்டனர்" என்றான்.

அ) பொருட்சேதம் ஆ) ஆட்சேதம் இ) உயிர்ச்சேதம்

9. "கடவுளின் பேழையும் கைப்பற்றப்பட்டது" என்று அம்மனிதன் கூறியபோது, ஏலி தம் இருக்கையினின்று பின்புறம் ........................ விழுந்து, கழுத்து முறிந்து இறந்தார். ஏனெனில், வயது முதிர்ந்து உடல்பெருத்தவராய் இருந்தார். இவர் 40 ஆண்டுகள் நீதித்தலைவராய் இருந்தார்.

அ) ஜன்னலருகே ஆ) கதவருகே இ) வாசலருகே

10. கர்ப்பினியாக இருந்த பினகாசின் மனைவி இவற்றை அறிந்ததும், பேறுகால வேதனையுற்று ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அவள் ........................ இருந்தபோது "இஸ்ரயேலினின்று மாட்சி அகன்றுவிட்டது" என்ற பொருள்பட அவனுக்கு 'இக்க போது' எனப் பெயரிட்டாள்.

அ) இறக்குந்தருவாயில் ஆ) சாகுந்தருவாயில் இ) மகிழ்ச்சியில்

[வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 171

பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. கோள்களில் மிகவும் தன் மைய அச்சிலிருந்து சாய்வுத் தன்மை கொண்டது :
   (ஜூபிட்டர் - யுரேனஸ் - பூமி)
2. மத்திய கோட்டுப் பகுதிகளில் சூரிய கிரகணம் நிகழ எடுக்கும் நேரம் :
   (7.32 நிமிடங்கள் - 7.30 நிமிடங்கள் - 7.31 நிமிடங்கள்)
3. புனித பெனடிக்டின் துறவறச்சபை ஆரம்பித்த வருடம் :
   (529 - 629 - 528)
4. இலங்கைத் திருச்சபையின் கடன் திருநாட்களில் ஒன்று :
   (ஜனவரி 1ந் திகதி - பெப்ரவரி 4ந் திகதி - மே 1ந் திகதி)
5. 'அகத்தின் அழகு புகத்தில் ..............................'
   (பார்க்கலாம் - அறியலாம் - தெரியும்)
6. ஆடினான் எனும் வினைமுற்றின் பகுதி :
   (ஆடி - ஆடு - ஆட்டு)

பெயர் : ....................................................................................

முகவரி : ....................................................................................

....................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 171
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 169 விடைகள்

பாவம், ஆண்டவரின், எகிப்து, நெருப்பு, ஊழியம், அகல்வதாக, கண்கள், அடையாளம், சேர்த்தருளும்

## அறிவை வளர்ப்போம் - 169 விடைகள்

1. நியூயோர்க் 2. லீசெஸ்ட் 3. வானாலிம்
4. யாவே 5. மழை 6. நீரேரி

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்**

- L. லபிஷா,
C/O, சோபனா,
இளங்கோ வீதி,
தம்பிலுவில் - 1.
- M. சாதனா,
பிரதான வீதி,
தம்பிலுவில் - 1.
- சுரேந்திரன் யூதாசினி,
யூதா நகர்,
தேற்றாத்தீவு - 01.
- பி. தர்ஷினி,
கார்மேல் மகளிர் இல்லம்,
அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 121 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**

செ. செசானிக்கா,
இல. 15, சரவண வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.

- **இரண்டாம் பரிசு - 300/=**

ஜெ. ஜெயமதி,
கார்மேல் அருணோதயம்,
அக்கரைப்பற்று.

- **மூன்றாம் பரிசு - 200/=**

A. எனன்சியா ஸ்டெப்னி,
கெஹேல் வத்த,
ஹொரப்டன்.


**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

## வெள்ளிவிழா நாயகரே!

கல்முனை தனைப் பிறப்பிடமாய்க் கொண்டே
குருசுத்தம்பி, கார்மேல் தம்பதியின் புதல்வரானீர்
இளமைக் கல்விதனை பூர்த்தி செய்தே
மறைபோதகராக திருமலை-மட்டுநகர் மறைமாவட்டந்தனில்
பாங்குடனே மறைபரப்பு பணியில் இணைந்தீர்
தாண்டவன்வெளி, திருகோணமலை, தன்னாமுனை
தியாவெட்டுவான், ஆயித்தியமலை தனில் பணிபுரிந்தீர்
இந்திய திண்டிவன மறைக்கல்வி நிலைய
இருவருட வேதியர் பயிற்சிதனையும் நிறைவுசெய்தீர்
அன்றைய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையாலே
இல்லறத் தியாக்கோன் ஆகும் கல்வியைப் பெற்றிட
அனுப்பப்பெற்றீர் உரோமாபுரி நகருக்கே
அங்கிருந்த வேளைதனில் தூயாவி உந்துதலால்
குருத்துவ அழைப்பினை ஊக்கமுடனேற்று
சொமஸ்கன் துறவற சபையிலே சேர்ந்து
மெய்யியல், இறையியல் கற்று உரோமாபுரியின்
புனித பீற்றர் தேவாலயந்தனிலே இன்றைய புனிதர்
திருத்தந்தை இரண்டாம் அருள்-சின்னப்பர் திருக்கையால்
வருடம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றிரண்டு
ஆனித்திங்கள் பதினான்காம் நன்னாளதிலே
குருவாகத் திருநிலைப்படுத்தப்படும் பேறு பெற்றீர்
இன்றுவரை தொடர்கிறது உம் இத்தாலியப் பணி
றெஜியோ கலாபிரியா என்னும் இடந்தனிலே
தான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்றே
எம்மிடையே சொமஸ்கன் துறவறச் சபையை வரவழைத்தீர்
மறைமாவட்ட வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் புரவலனாய்
எம் சஞ்சிகை தொண்டனுக்கும் அனுசரணை வழங்குகிறீர்
**வெள்ளிவிழா நாயகரே!**
நீடூழி இறை ஆசீர் பெற்று மறைபணி புரியவே
வாழ்த்துகின்றோம் தொண்டன் குடும்பம் நாமே!



**அருட்தந்தை. அன்டனி குரூஸ். CRS**

**தொண்டன் குடும்பம்,**
**மட்/சமூகத் தொடர்பு நிலையம்,**
**ஆயர் இல்லம்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org